மல்கியா 4:2
யோவான் 17:17
நீதியின் சூரியன் உதிக்கும்
அதின் செட்டைகளின்கீழ் ஆரோக்கியம் இருக்கும்
உம்முடைய வசனமே சத்தியம்

# புது உடன்படிக்கை

மில்லினிய வேதாகம சத்திய இயக்கம்

*Vol. 119* *ஜனவரி 2026*

# விழித்து, எழுந்து, கிறிஸ்துவின் வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்

*PT# 593, Sept-Oct 1984, pp.66-79*




*"தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திரு, அப்பொழுது கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்"*
*எபே. 5:14*

*1.* **ஒ**வ்வொரு வருடமும் சகோதரர்களுக்குச் சட்ட வாக்கியத்தைக் கொடுக்கும் வழக்கம் பரூஷியாவின் ஆரம்ப காலத்தில் பாஸ்டர் ரஸலால் தொடங்கி வைக்கப்பட்டது. எபிப்பெனி காலத்திலும் பாஸ்டர் ஜான்சன் அதைத் தொடர்ந்து செய்தார். இது ஒரு நல்ல வழக்கம் என்று நாங்கள் நம்புகிறோம். ஆனால் அந்த வசனத்தை மனதில் கொண்டு, அதின் கொள்கைகளை அப்பியாசிக்கும்படி அதை இருதயத்தில் பற்றிக் கொள்வதற்கு அதைக் குறித்து அடிக்கடி தியானிக்காவிட்டால், அது நமக்கு அதிக நன்மையை விளைவிக்காது. சட்ட வாக்கியம் அறிவிக்கப்பட்டவுடனே அல்லது கொஞ்சங் காலத்திற்குப் பிறகு அதை மறந்துவிடுவதென்பது, நம்முடைய வாழ்க்கையில் எந்த கனியையும் கொடுக்காது. அதை அப்பியாசிக்கும்படி ஊக்குவிக்கப்படுவதற்கு அதைத் தியானிக்காவிட்டாலும் அது பயனற்றதாகும். சட்ட வாக்கியத்தை மனதில் கொண்டு, மேலே குறிப்பிடப்பட்ட விதத்தில் அதைத் தியானிப்பவர்கள் மட்டுமே அதிலிருந்து நிலையான நன்மையைப் பெற்றுக் கொள்வார்கள். மேலும் அவர்கள் எந்தளவிற்கு அதை நினைவு கூர்ந்து தியானிக்கிறார்களோ, அந்தளவிற்கு ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்வார்கள்.

## தூது நிரல்

1. விழித்து, எழுந்து, கிறிஸ்துவின் வெளிச்சத்தைப் பெற்றுக் கொள்........1
2. நம்முடைய மா உன்னத தேவன்........13
3. தாவீதின் வேரும் சந்ததியும்........17

*2.* நாம் எப்படிப்பட்டவர்களாயிருக்கிறோம்? சட்ட வாக்கியம் அறிவிக்கப்பட்ட கொஞ்சங் காலத்திலே அதை மறந்து, மேலே விவரிக்கப்பட்ட விதத்தில் அதைத் தியானிக்காதவர்களாக இருக்கிறோமா? அல்லது அந்த வருடத்தில் அதைப் பலமுறை நினைவு கூர்ந்து, அதைக் குறித்து தியானித்து, அதை அப்பியாசிக்கும் பெலத்தைப் பெற்றுக் கொள்கிறவர்களாக இருக்கிறோமா? இது சம்பந்தமாக நாம் ஒவ்வொருவரும் நம்மை ஆராய்ந்து கொள்வது நலமாயிருக்கும். நாம் இந்த முறையைக் கடைப்பிடித்தால் அது வருடம் முழுவதும் நமக்கு அவ்வப்போது ஆசீர்வாதத்தைக் கொண்டு வரும். நாம் அதைக் கடைப்பிடிக்காவிட்டால், அதை அசட்டை செய்த தற்காகச் சிட்சிக்கப்படுவோம். ஆகையால் நாம் நம் முடைய வருடாந்தர சட்ட வாக்கியத்தை இந்த வருடம் முழுவதும் சரியாகப் பயன்படுத்திக் கொண்டு, தேவ னுக்குத் துதி உண்டாகும் படி அதிலிருந்து நன்மையைப் பெற்றுக் கொள்வோமாக.

*3.* நம்முடைய இந்த வருட சட்டவாக்கியத்தில் இரண்டு புத்திமதிகளும் ஒரு வாக்குத்தத்தமும் இருக் கின்றன. அந்த இரு புத்திமதிகள் அப்பியாசிக்கப்படும் போது மட்டுமே அந்த வாக்குத்தத்தம் நிறைவேற்றப் படும். இந்த புத்திமதிகளில் முதலாவது, “தூங்குகிற நீ விழி” என்பதாகும். இரண்டாவது, “மரித்தோரை விட்டு எழுந்திரு” என்பதாகும். தங்கள் தூக்கத்திலிருந்து விழித்து, மரித்தோரை விட்டு எழுந்திருப்பவர்களுக்கு, “கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்” என்ற வாக்குத் தத்தம் கொடுக்கப்படுகிறது. இந்த மூன்று வாக்கியங்கள் ஒவ்வொன்றையும், வசனத்தில் அவைகள் வரும் வரிசை யில் கருத்தில் கொள்வோம்.

## தூங்குகிற நீ விழி

*4.* நாம் முதலாவதாகத் “தூங்குகிற நீ விழி” என்ற வார்த்தைகளை ஆராய்வோம். இங்கே குறிப் பிடப்பட்ட தூக்கம் இயற்கையான தூக்கமல்ல என்பது வெளிப்படையாக இருக்கிறது. இவ்வசனத்தில் ஆவிக் குரிய தூக்கம் அர்த்தப்படுத்தப்படுகிறது. ஆனால் அதை விளக்குவதற்கு இயற்கையான தூக்கத்தின் காரியங்கள் நமக்கு உதவும். வேதாகமம் ஆவிக்குரிய தூக்கத்தைக் குறித்து பேசுவதை விட அதிகமாக உருவகமான தூக்க மாகிய மரணத்தைக் குறித்துப் பேசுகிறது. வேதாகமத்தில் *200* முறைக்கும் மேலாக மரணம் ஒரு நித்திரையாகக் குறிப்பிடப்படுகிறது. இருந்தாலும் வேதாகமம் சில நேரங்களில் ஆவிக்குரிய தூக்கத்தைக் குறித்தும் சொல் கிறது. எடுத்துக்காட்டாக இதை நாம் ஏசா. *56:10*-ம் வசனத்தில் காண்கிறோம். தீர்க்கதரிசி இவ்வசனத்தில் பொய்யான ஆவிக்குரிய மேய்ப்பர்களை விவரிக்கிறார். அவர்கள் செய்கிற சில தவறான காரியங்களைக் குறித்துச் சொன்ன பிறகு, “தூக்க மயக்கமாய் புலம்புகிறவர்கள், படுத்துக் கொள்கிறவர்கள் நித்திரை பிரியர்” என்று அவர்களைக் குறித்துச் சொல்கிறார். இதே தீர்க்கதரிசி விசுவாச உண்மைத்துவமற்றவர்களை குறித்துப் பேசும் போது, “கர்த்தர் உங்கள் மேல் கன நித்திரையின் ஆவியை வரப் பண்ணி, உங்கள் கண்களை அடைத்தார்” என்று சொல்கிறார் *(ஏசா. 29:10)*.

*5.* சுவிசேஷ யுகத்தின் சில காலங்களில் விசு வாச உண்மைத்துவமுள்ளவர்களும் கூட ஆவிக்குரிய ரீதி யில் தூங்கி விட்டார்கள். இயற்கையான தூக்கத்திலிருந்து ஒருவன் எழுப்பப்படுவதைப் போல், விசுவாச உண்மைத் துவமுள்ளவர்களும் ஆவிக்குரிய தூக்கத்திலிருந்து எழுப் பப்பட வேண்டியதாயிருந்தது *(சகரி. 4:1; மத். 25:5-7)*. நாம் தேவனுடைய மகா நாளுக்கு மிக சமீபமாயிருப்பதால், “நித்திரையை விட்டு எழுந்திருக்கத்தக்க வேளையா யிற்று” என்று பவுல் அப்போஸ்தலர் நினைவுப்படுத்து கிறார் *(ரோம.13:11)*. தடுமாறின கொரிந்து சகோதரர் களிடம், “உங்களில் அநேகர் பலவீனரும் வியாதியுள்ளவர் களுமா யிருக்கிறார்கள், அநேகர் நித்திரையும் அடைந் திருக்கிறார்கள்” *(1கொரி.11:30)* என்று சொன்னார். “மற்றவர்கள் தூங்குகிறது போல் நாம் தூங்காமல். இருக்கக்கடவோம். தூங்குகிறவர்கள் இராத்திரியிலே (பாவமென்னும் இராத்திரியிலே) தூங்குவார்கள்” என் றும் புத்திமதி சொல்லுகிறார் *(1தெச. 5:6,7)*. ஆவிக்குரிய தூக்கம் என்ற ஒரு காரியம் இருக்கிறது என்று நிரூபிப் பதற்கு இவ்வசனங்கள் போதுமானவைகளாக இருக் கின்றன. நாமெல்லோரும் அறிந்ததை போல், நம்முடைய அனுபவமும், நாம் கவனிக்கிற காரியங்களும் இந்த கருத்தை உறுதி செய்கின்றன.

*6.* இவ்விதமான ஒரு தூக்கத்தைத் தான் நம் முடைய பாட வசனம் நம்முடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறது. ஏனென்றால் பவுல் அப்போஸ்தலர் இந்த வார்த்தைகளை இயற்கையாகத் தூங்குகிறவர் களிடம் சொல்லவில்லை. மேலும் மரணமென்னும் நித்திரையிலிருப்பவர்களிடமும் இதைச் சொல்லவில்லை. ஆகையால் அவர் ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவர் களுக்கு இந்த வார்த்தைகளைச் சொல்லி இருக்க வேண்டும். அதாவது ஆவிக்குரிய ரீதியில் முழுமையாக விழித்திராமல், தூங்கிக்கொண்டிருந்த சகோதரர்களுக்கு அவர் இந்த வார்த்தைகளைச் சொன்னார். எந்த நிலை யிலிருந்து அப்போஸ்தலர் அவர்களை எழுப்ப நாடினார் என்பதை முதலில் கவனிப்போம். அவர் அவர்களை ஆவிக்குரிய தூக்கத்திலிருந்து எழுப்ப நாடினார். அந்த நிலையில் நாம் எந்த ஆற்றல்களும் இல்லாதவர்களாக இருக்கிறோம் என்பது, இயற்கையான தூக்கத்தில் நமக்கு இல்லாத ஆற்றல்களிலிருந்து விளக்கப்படுகிறது.

## தூங்குகிறவர்களில் ஐந்து ஆவிக்குரிய புலனுணர்வுகளும் செயல்படுவதில்லை

*7.(1)* இயற்கையாகத் தூங்குகிறவர்களைச் சுற்றி நடக்கிற எதையும் அவர்கள் காண்பதில்லை. அது போலவே ஆவிக்குரிய ரீதியில் தூங்குபவர்கள், அவ்வாறு தூங்கிக் கொண்டிருக்கும் போது முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிற சத்தியத்தைக் காண மாட்டார்கள். தெளி வாக விழித்திருக்கிற சகோதரர்கள் மட்டுமே அதைக் காண்பார்கள். ஏனென்றால் அவர்களுடைய புரிந்து கொள்ளும் ஆற்றல்கள் சுறுசுறுப்பாகச் செயல்படும். அவர்களுடைய இருதயங்கள் சரியான நிலையிலிருப் பதால், அவர்களுடைய ஆவிக்குரிய கண்கள் திறந்திருக் கும். அவர்களுடைய உருவகமான கண்களின் மேல் ஆவிக்குரிய படலங்கள் *(cataracts)* இல்லாதிருக்கும். ஆகை யால் அவர்கள் காணும் கண்களை உடையவர்களாயிருப் பார்கள். அவர்கள் தேவனுடைய முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிற சத்தியத்தின் உயரங்களையும் ஆழங் களையும், நீளங்களையும் அகலங்களையும் காணும் படிக்கு கர்த்தர் அவர்களுடைய கண்களை இன்னும் அகலமாகத் திறப்பார்.

*8.* ஆனால் ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவர் களின் புரிந்துகொள்ளும் கண்கள் மூடியிருக்கும். அல்லது அவர்களுடைய கண்களின் மேல் பெருமை அல்லது

*கீழ்ப்படியாமை அல்லது ஆர்வமின்மை அல்லது நேர்மை யின்மை, நற்குணமின்மை, போற்றித்துதிக்கும் பயபக்தி யின்மை அல்லது பிரதிஷ்டையின்மை என்னும் கண் படலங்கள் இருக்கும். அவர்களுக்கு மனத்தாழ்மை, பணிவு நயம், சத்தியம் மற்றும் நீதியின்மேல் பசி தாகம், நேர்மை, நற்குணம், போற்றித்துதிக்கும் பயபக்தி மற்றும் பரிசுத்தமென்னும் கலிக்கம் தேவையாயிருக்கிறது. இது இவ்வித கண் படலங்களைக் குணமாக்கும். அல்லது அவர்களுடைய கண்கள் மூடியிருந்தால், அவர்கள் எழுப் பப்படுவது தேவையாயிருக்கும். அவர்கள் எவ்வளவு ஆழ்ந்து தூங்குகிறார்கள் மற்றும் எந்தளவிற்கு அதற்குப் பழக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைப் பொறுத்து அவர் - கள் கடுமையாகவோ அல்லது மென்மையாகவோ எழுப் பப்பட வேண்டியதாயிருக்கும்.*

*9.(2) ஒருவன் இயற்கையாகத் தூங்கும்போது எதையும் கேட்க மாட்டான். பல நேரங்களில் சத்தங் களினால் அவன் எழுப்பப்படுகிறான் என்பது உண்மை. ஆனால் அவன் தூங்கிக்கொண்டிருக்கும்போது எதையும் கேட்க மாட்டான். ஏனென்றால் அவனுடைய இயற்கை யான காதுகள் தூக்கமென்னும் உருவகமான பஞ்சினால் உருவகமாக மூடப்பட்டிருக்கின்றன. இதுவும் ஆவிக்குரிய தூக்கத்தின் மற்றொரு நிலையை விளக்குகிறது: ஆவிக் குரிய ரீதியில் தூங்குகிறவர்கள் விசுவாச செவி இல்லாத வர்களாயிருக்கிறார்கள். விசுவாசத்தின் காரியங்களில் செயல்படவோ, அவைகளை ஏற்றுக் கொள்ளவோ ஆற்றல் இல்லாதவர்களாயிருப்பார்கள். விசுவாசத் தினாலே நாம் காரியங்களை அறிந்து கொள்கிறோம் (எபி. 11:3). இவ்வசனம், ஒரு யுகத்திலிருந்து மற்றொரு யுகத் திற்குச் செல்லும் போது நடைபெறும் மாற்றங்களைப் புரிந்துகொள்வதைக் குறித்து நேரடியாகப் போதிக்கிறது. ஆனால் விசுவாசத்தின் மற்றெல்லா காரியங்களுக்கும் இது உண்மையாயிருக்கிறது. விசுவாசத்தினாலே நாம் அவைகளை அறிந்து கொள்கிறோம். குருட்டுத்தனமான அவிசுவாசம் நிச்சயமாகத் தவறான வழியில் நடத்தும். மேலும் அது தேவனுடைய கிரியைகளை வீணாய் ஆராயும். ஏனென்றால் விசுவாசமுள்ளவர்களுக்கு மட்டுமே தேவன் தம்முடைய வழிகளைத் தெளிவுப் படுத்துவார். மேலும் அவர்களுடைய விசுவாசத்தின் மூலமே அவைகளை அவர்களுக்குத் தெளிவுப்படுத்து வார்.*

*10. ஆகையால் தூங்குகிற கிறிஸ்தவர்களுக்கு விசுவாசத்தின் காரியங்கள் கேட்காது. அவர்கள் அவை களை ஏற்றுக் கொள்ளும் ஆற்றல் இல்லாதவர்களாக இருக்கிறார்கள். அவர்கள் கொஞ்சங் காலத்திற்கு, ஒரு போதும் பிரகாசிப்பிக்கப்படாதவர்களைப் போலிருப்பார் கள். அவர்கள் கேட்டும் கேளாதவர்களாயிருக்கிறார்கள் (மத். 13:13-15). அவர்கள் தேவனுடைய காரியங்களைப் புரிந்துகொள்ளத் திராணி இல்லாதவர்களாயிருப்பதால், மிகவும் வருந்தத்தக்க நிலையிலிருப்பார்கள். ஏனென் றால் தேவனுடைய காரியங்களைப் புரிந்துகொள்கிறவர் களுக்கு அவைகள் மிகுந்த மகிழ்ச்சி அளிக்கும். அவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் அவைகளை ருசித்துப் புரிந்து கொள்கிறார்கள். ஆனால் ஆவிக்குரிய ரீதியில் தூங்கு கிறவர்களின் காதுகள் பாவம், தப்பறை, சுயநலம், அல்லது உலகத்தனம் என்னும் உருவகமான பஞ்சினால் மூடப் பட்டிருப்பதால் அவர்கள் அவைகளைக் கேட்கும் திராணி இல்லாதவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் ஆவிக்குரிய ரீதியில் சிந்திக்காதிருக்கிறார்கள் என்பதை அவர்களு டைய உணர்ச்சிகள் இல்லாத வெறுமையான முகங்கள் வெளிப்படுத்தும்.*

*11.(3) இயற்கையாகத் தூங்குகிற ஒருவன் சுவை உணர்வில்லாதவனாக இருப்பான். அது போலவே ஆவிக் குரிய ரீதியில் தூங்குகிறவன் ஆவிக்குரிய காரியங்களின் சுவையை உணராத நாவை உடையவனாக இருக்கிறான். ஆவிக்குரிய சுவை உணர்வென்பது, தேவனிலும் கிறிஸ்து விலும், சத்தியத்திலும், சத்திய ஆவியிலும், சத்தியத்தைப் பெற்றுக் கொண்டவர்களிலுமுள்ள நன்மையை மதித் துணரும் திறனாகும். ஆவிக்குரிய சுவை உணர்வுக்குத் தேவன், கிறிஸ்து, பரிசுத்த ஆவி, மீட்கும் பலி, சுவிசேஷ யுக அழைப்பு, இழந்ததைத் திரும்பக் கொடுத்தல், வரவிருக்கும் மகிமைகள், இரட்சிக்கப்பட்ட வகுப்பார்கள் முதலிய சத்தியங்கள் மிகவும் மதுரமாயிருக்கும் - "தேனி லும் தேன் கூட்டிலிருந்து ஒழுகும் தெளிதேனிலும் மதுர முள்ளதாயிருக்கும்" (சங்.19:10). ஏனென்றால் அவர் களுடைய நாவுகள் அந்த சுவைக்குப் பழக்கப் பட்டிருக்கின்றன (சங்.119:103). கர்த்தரும், அவருடைய சத்தியமும், அவருடைய ஆவியும் கிருபையானவைகள் என்றும் அருமையானவைகள் என்றும் அவர்கள் ருசி பார்த்திருக்கிறார்கள், தொடர்ந்து ருசி பார்த்துக் கொண்டி ருக்கிறார்கள் (சங். 34: 8; 119: 103; உன். 2: 3; எபி. 6: 4, 5; 1 பேது. 2: 3).*

*12. ஆனால் தூங்குகிற கிறிஸ்தவனானவன் இந்த காரியங்களின் இனிமையை ருசி பார்ப்பதில்லை, அதை உயர்வாக மதிப்பதில்லை. அவைகள் அவனுக்குச் சுவை யற்றவைகளாக இருக்கும். அல்லது அவனுடைய உருவ கமான வயிற்றில் குமட்டலை உண்டு பண்ணும். அதினால் அவன் பல நேரங்களில், முற்காலத்தில் ஆர்வத்துடன் உட்கொண்டவைகளையும் வாந்தி பண்ணுவான். இந்த காரியங்களைக் குறை கூற தொடங்குவான். இவைகள் சம்பந்தப்பட்ட எல்லா காரியங்களும் அவனுக்குச் சுவை யற்றவைகளாக இருக்கும். இதுவும் மிகவும் வருந்தத்தக்க ஒரு நிலையாகும்.*

*13.(4) இயற்கையாகத் தூங்குகிறவன் இயற்கையான வாசனையை நுகரும் திறன் இல்லாதவனாக இருப்பான். அது போலவே தூங்குகிற கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வாசனையை நுகராதவர்களாக இருப்பார்கள். இயற்கை யாகத் தூங்குகிறவனைச் சுற்றி துர்நாற்றமிருந்தாலும் நறு மணமிருந்தாலும், அவன் அவைகளை உணருவதில்லை. அது போலவே ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவன், தேவன், கிறிஸ்து மற்றும் சகோதரர்களின் குணாம்சங் களின் சுகந்த வாசனையை உணராதவனாயிருக்கிறான். தெளிவாக விழித்திருக்கிற தேவனுடைய பிள்ளைக்கு அவைகள் சுகந்த பரிமளங்களாக இருக்கின்றன. ஆனால் ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவனுக்கு அவைகள் அவ் வாறு இருப்பதில்லை. விழித்திருக்கும் தேவனுடைய பிள்ளையானவன் தேவன், கிறிஸ்து பரிசுத்தவான்கள் ஆகியவர்களின் உயர்நிலை முதன்மை, தாழ்நிலை முதன்மை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலை குணநலன்களைக் குறித்து தியானிக்கும் போது என்னே களிகூருவான்! ஆனால் ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவன் அவைகளை மறந்து போகிறான், கவனிக்காதிருக்கிறான், அசட்டை செய்கிறான். ஏனென்றால் அவைகளுடைய சுகந்த வாசனையை நுகரும் திறன் இல்லாதவர்களாக அவர்கள் தொடர்ந்து தூங்கிக் கொண்டிருப்பார்கள்.*

*14.(5) தூங்குகிற கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய தொடு உணர்ச்சி திறனும் இல்லாமல் போகும். கிருபை, இரக்கம் மற்றும் சத்தியத்தின் உருக்கமான காரியங்கள் தொடுவதை உணராதிருப்பார்கள். இயற்கையாக ஆழ்ந்து தூங்குகிறவனைத் தொடும் போது அதை அவன் உணரா திருப்பான். அது போலவே, தெளிவாக விழித்திருக்கும்*

கிறிஸ்தவர்களின் ஒத்துணர்வைத் தூண்டும் காரியங்கள் ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவர்களைத் தூண்டாது. பிரதிஷ்டை செய்தவர்களின் பெலவீனங்களைக் குறித்து அவர்கள் பரிதபிக்க மாட்டார்கள். அவர்கள் ஆவிக்குரிய திமிர்வாதமுள்ளவர் களாயிருப்பார்கள். பிரசவ வேதனைப்படுகிற சிருஷ்டியின் வேதனைகள் அவர் களுடைய உணர்ச்சியற்ற இருதயங்களைத் தொடாது. மற்றவர்களின் மன ரீதியான, கலை ரீதியான, ஒழுக்க ரீதியான மற்றும் மத ரீதியான குறைபாடுகள், தோல்விகள், தவறுகள் மற்றும் பெலவீனங்கள் அவர்களை எவ்விதத் திலும் பாதிக்காது. அவர்கள் கற்களைப் போல உணர் வற்றவர்களாக இருப்பார்கள். இவ்வாறாக இயற்கை யாகத் தூங்குகிறவனின் ஐந்து இயற்கையான புலனுணர்வு கள் செயலற்றிருப்பதைப் போலவே, ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவர்களும் ஐந்து ஆவிக்குரிய புலனுணர்வுகளை அப்பியாசிப்பதில்லை.

## மற்ற பொருத்தமான இணைகள்

*15.* இயற்கையாகத் தூங்குகிற ஒருவனின் கை களும் ஆற்றலற்று செயல்படாமலிருக்கும். ஆகையால் அவைகள் தேவனுக்கோ சுயத்திற்கோ பிறனுக்கோ ஊழி யம் செய்யாதவைகளாகவும், இயற்கையான பலத்தை அப்பியாசிக்காதவைகளாகவும் இருக்கும். ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவனின் உருவகமான கைகளும் அவ் வாறே இருக்கும். வேதாகம அடையாளங்களில் கை என்பது திறமையையும் ஊழியத்தையும் குறிக்க உபயோ கிக்கப்படுகிறது *(சங். 10: 12; 37: 24; 77: 20; 89: 13; 119: 173; நீதி. 1: 24; ஏசா. 53: 10; எரே. 18: 4, 6; யோவா. 10: 28, 29; கலா. 3: 19; 1 பேது. 5: 6; வெளி. 1: 16, 17, 20; 10: 2; 13: 16; 14: 14; 17: 4; 20: 1).* ஆகையால் இயற்கையாகத் தூங்குகிற ஒருவன் ஊழியம் செய்ய திறமையற்றவனாக இருப் பதைப் போலவே, ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவனும் ஊழியம் செய்ய ஆவிக்குரிய திறமையற்றவனாகவும் செயலற்றவனாகவும் இருப்பான். அவன் ஊழியம் செய்து உபயோகமாக இருக்க திராணியற்றவனாக இருப்பான். அவன் எந்த நன்மையும் செய்ய மாட்டான். நன்மையான எந்த வேலையைச் செய்யவும் உபயோகமற்றவனாக இருப்பான். கர்த்தருடைய ஊழியத்தில் வைராக்கியமாகச் செயல்பட அவனுக்கு ஆலோசனை கூறினாலும், அவன் அதற்கு ஏற்ற பிரதிகிரியையைச் செய்ய மாட்டான். அவன் ஆவிக்குரிய திறமையையும் ஊழியத்தையும் அப்பியாசிக் கவே மாட்டான்.

*16.* அதுபோலவே ஆவிக்குரிய ரீதியில் தூங்கு கிறவனின் பாதங்கள் நீதி மற்றும் பரிசுத்தத்தின் பாதை களில் நடப்பதில்லை. வேதாகம அடையாளங்களில் நம் முடைய பாதங்கள் நடத்தையைக் குறிக்கின்றன. அது நன்மையானதாக அல்லது தீமையானதாக இருக்கக் கூடும். ஆனால் விசேஷமாக அது நல்ல நடத்தையைக் குறிக்கும் *(சங். 18: 36; 31: 8; 56: 13; 119: 105; நீதி. 1: 16; 5: 5; ஏசா. 59: 7; ரோம. 3: 15; எபே. 6: 15; எபி. 12: 13; வெளி. 1: 15).* இயற்கையாகத் தூங்குகிறவன் நடக்காமலிருப்பதென்பது ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவன் கிறிஸ்தவனுக்குரிய நெருக்கமான பாதையில் நடக்காமலிருப்பதை அடை யாளப்படுத்தும். அந்த பாதையில் அடங்கியுள்ள காரியங் களாவன: சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்திருப்பது, விழித்திருத்தல் மற்றும் ஜெபம், ராஜ்யத்தின் காரியங் களை நாடுவது, குணநலன்களை அபிவிருத்தி செய்து கொள்வது, சோதனைகளையும் சிட்சைகளையும் சகிப் பது, கிறிஸ்துவின் குணாம்சத்திற்கொத்த குணாம்சத்தை அடையும்வரை சத்தியத்திற்காகவும் நீதிக்காகவும் பரிசுத் தத்திற்காகவும் பாடுபடுவது. இந்த காரியங்களைச் செய்வதற்குத் தேவையான ஆவிக்குரிய பலத்தை உப யோகிப்பதென்பது, ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிற ஒருவனின் செயலற்றுப்போன ஆவிக்குரிய தசை களுக்குக் கடுமையான ஒரு முயற்சியாக இருக்கும்.

*17.* இயற்கையாகத் தூங்குகிற சிலருக்குத் தூக் கத்தில் நடக்கும் நோய் இருக்கும். அந்த நோயில் அவர்கள் தங்கள் பாதங்களுக்குக் கூடுதலாக மற்ற சரீர உறுப்புகளையும் உபயோகிப்பார்கள். இது அவர்களுக் குப் பல நேரங்களில் பேராபத்தை உண்டாக்கும். ஆவிக் குரிய ரீதியிலும் தூக்கத்தில் நடக்கும் நோய் இருக்கக் கூடும். அது பாவம், தப்பறை, சுயநலம் மற்றும் உலகத் தனத்தின் பல்வேறு வடிவங்களில் கிரியை செய்யும். இவ்வாறு நோயுற்று ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவன் தன் செயல்களின் தன்மையை உணராதவனாக இருப் பான். இது பல நேரங்களில் அவனை ஆவிக்குரிய பேரா பத்துகளுக்குக் கொண்டு செல்லும். மேலும் இக்காலத் திற்கும் வருங்காலத்திற்கும் அவனுடைய பரிசுத்த ஆவியை முற்றிலும் சீர்குலையச் செய்யும்.

*18.* இயற்கையாகத் தூங்குகிறவர்கள் பல நேரங் களில் கனவுகளைக் காண்பார்கள். அவைகள் இனிமை யான அல்லது கெட்ட கனவுகளாக இருக்கக்கூடும். ஆனால் அவைகள் எப்போதுமே உண்மையற்றவைகளாக இருக்கும். அது போலவே ஆவிக்குரிய தூக்கத்திலும் ஆவிக்குரிய கனவுகள் இருக்கும். அவ்வாறு தூங்குகிற சிலர் சுயம், சகோதரர்கள் மற்றும் உலகத்தார் சம்பந்த மாகப் பல பொய்யான எண்ணங்கள் உடையவர்களாக இருப்பார்கள். சில கனவுகள் கொஞ்ச நேரத்திற்கு இனிமையாகத் தோன்றும். ஆனால் உண்மையை உணர்ந்த வுடனே அவைகள் நீர் குமிழ்களைப் போல் ஒன்று மில்லாமல் மறைந்து போம். சில கனவுகள் கெட்ட கனவுகளாகவும் இருக்கும். சுயத்தைக் குறித்தும் மற்ற வர்களைக் குறித்தும் எவ்வித அடிப்படையுமில்லாத அச்சங்கள் அவர்களுக்கு இருக்கும். அவர்கள் விழித் தெழுந்து உண்மையை அறிந்து கொள்ளும் போது, அவை கள் ஆவிக்குரிய கெட்ட கனவுகளாக இருந்தன என்று உணர்ந்து அவைகளை அகற்றுவார்கள். சில சகோதரர் களுக்கு வருகிற பொருளற்ற யூகங்களும் இவ்வித கனவு களாக இருக்கின்றன. தங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டுமென்ற பரிசுத்தமற்ற பேராசை களும் இவ்வித கனவுகளாக இருக்கின்றன. பல சகோதரர் கள் இவ்வித கனவுகளைக் கண்டிருக்கிறார்கள், இப்போ தும் காண்கிறார்கள். இவைகள் எப்போதுமே வருத்தத் திலும் ஏமாற்றத்திலும் முடியும்.

*19.* உருவகமான தூக்கத்தில் உருவகமாகப் பேசுவதென்பது தப்பறைகளைச் சொல்வதாகும். இயற் கையாகத் தூங்குகிறவர்கள் தூக்கத்தில் நடப்பது, சுவாசிப் பது, குறட்டை விடுவது, அவர்களுடைய இருதயம் துடிப் பது, தானாக இயங்கும் தசைகளின் இயக்கம் போன்ற செயல்களில் ஈடுபடுவதைத் தவிர, மரித்த ஒருவனுக்கு மிகவும் ஒப்பாக இருப்பார்கள். ஆவிக்குரிய காரியங் களில் தூங்குகிறவர்களின் காரியமும் அவ்வாறே இருக் கும். அவர்கள் மரித்தவர்களுக்கு, அதாவது இரண்டாம் மரணக்காரர்களுக்குச் சற்று முன் நிலையிலிருக்கிறார்கள். அவர்களில் ஆவிக்குரிய ஜீவன் இன்னும் இருக்கிறது என்பதற்கு தானாகவே இயங்குகிற சில சான்றுகள் காணப்பட்டாலும் கிறிஸ்தவ ஜீவன் என்பது கிட்டத்தட்ட இல்லாமலே போகும்.

*20.* ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறவர்களின்

நிலையை நாம் கருத்தில் கொள்ளும்போது, நாம் ஆவிக்குரிய ரீதியில் தூங்குகிறோமா என்று நிச்சயித்துக் கொள்வதற்கு நாம் ஒவ்வொருவரும் நம்மை நாமே பரிசோதித்துக் கொள்வது ஏற்றதாகும். மேலும் புது அனுபவங்களுக்குள் (எடுத்துக்காட்டாக புது வருடத்திற்குள்) செல்லும் போது, நம்மை நாமே அவ்வாறு பரிசோதித்துக் கொள்வது இன்னும் ஏற்றதாகும். நம்முடைய ஆவிக்குரிய கண்கள் விசுவாசத்தின் காரியங்களை, விசேஷமாக முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிற சத்தியத்தைக் காணாதிருக்கின்றனவா? நம்முடைய ஆவிக்குரிய செவிகள் அவைகளைப் புரிந்துகொள்ளாதிருக்கின்றனவா? நம்முடைய ஆவிக்குரிய சுவை உணர்வு செயலற்றிருக்கிறதா? நம்முடைய ஆவிக்குரிய நுகரும் திறன் செயல்படாதிருக்கிறதா? நம்முடைய ஆவிக்குரிய தொடு உணர்வு திறனும் உணர்வற்றிருக்கிறதா? நம்முடைய ஆவிக்குரிய கரங்கள் முயற்சியற்றிருக்கின்றனவா? நம்முடைய ஆவிக்குரிய பாதங்கள் நீதி மற்றும் பரிசுத்தத்தின் பாதையில் நடவாமலிருக்கின்றனவா? நம்முடைய ஆவிக்குரிய தூக்கம் வஞ்சனையான கனவுகளால் (இன்பமான அல்லது கெட்ட கனவுகளால்) நிறைந்திருக்கிறதா? நம்முடைய ஆவிக்குரிய தசைகள் பயிற்சியற்றிருக்கின்றனவா? இந்த விஷயத்தில் நாம் எவ்வித நோயுமில்லாமல் ஆரோக்கியமாக இருக்கிறோம் என்று விரைவாக முடிவுக்கு வராதிருப்போமாக.

*21.* தான் ஆவிக்குரிய ரீதியில் தூங்குவதை அல்லது ஆவிக்குரிய ரீதியில் தூக்க மயக்கமுள்ளவனாக இருப்பதை ஒருவன் கண்டுகொண்டால், நம்முடைய பாட வசனத்தின் முதலாம் வாக்கியத்தொடர் சம்பந்தமாக நாம் மேலே கருத்தில் கொண்ட சிந்தனைகள் அந்த தூக்கத்திலிருந்து அவனை எழுப்பும் படி பார்த்துக் கொள்ள வேண்டுமல்லவா? இந்த சிந்தனைகள் நம்மை எந்த நிலைக்கு எழுப்ப வேண்டும்? ஆவிக்குரிய தூக்கத்தின் இயல்புகளுக்கு எதிரிடையான நிலைக்கு நம்மை எழுப்ப வேண்டுமல்லவா? ஆகையால் தேவனுடைய காரியங்களைக் காணும்படி நம்முடைய கண்களையும், விசுவாசத்தின் காரியங்களைப் புரிந்துகொள்ளும் நம்முடைய செவிகளையும், கர்த்தர் சத்தியம் மற்றும் சத்தியத்தின் ஆவி ஆகியவற்றின் இனிமையை மகிழ்ச்சியுடன் ருசிக்கும்படி நம்முடைய சுவை உணர்வையும், கர்த்தர் சத்தியம் சத்தியத்தின் ஆவி, சகோதரர்கள் மற்றும் நமக்கு முன் வைக்கப்பட்ட மகிமையான நம்பிக்கை ஆகியவற்றின் நறுமணத்தை நுகரும்படி நம்முடைய நுகரும் திறனையும், கிருபை, இரக்கம் மற்றும் சத்தியம் ஆகியவைகளை மிகவும் நுனுக்கமாக உணரும்படி நம்முடைய தொடு உணர்வு திறனையும், கர்த்தர், சத்தியம், சகோதரர்கள் மற்றும் நம்மோடு தொடர்புடைய மற்றவர்களுக்கு ஆர்வமாக ஊழியம் செய்யும்படி நம்முடைய கரங்களையும், சத்தியம், நீதி மற்றும் பரிசுத்தத்தின் பாதையில் நடப்பதில், ஆம் ஓடுவதில் களிகூர நம்முடைய பாதங்களையும் பயிற்றுவிப்போமாக. நம்முடைய மாம்சத்தினாலும் உலகத்தினாலும் வருகிற வீணான கனவுகளை முற்றிலும் அகற்றுவோமாக. சாத்தான் கொடுக்கும் ஆலோசனைகளிலிருந்து நம்முடைய கவனத்தைத் திருப்பி, நம்முடைய திறமைகளெல்லாம் ஆவிக்குரிய ரீதியில் விழிப்பாயிருந்து சத்தியத்தின் ஆவியோடு ஊக்கமாகச் செயல்படும்படி செய்வோமாக.

## மரித்தோரை விட்டு எழுந்திருப்பது

*22.* நம்முடைய பாட வசனத்தின் இரண்டாம் புத்திமதி “மரித்தோரை விட்டு எழுந்திரு” என்பதாகும், “மரித்தோர்” என்ற பதத்தின் மூலம் பரிசுத்த பவுல் எதை அர்த்தப்படுத்துகிறார்? மரண நிலையிலிருப்பவர்களை அவர் அர்த்தப்படுத்தவில்லை என்பது வெளிப்படையாயிருக்கிறது. ஏனென்றால் அவர் இந்த வார்த்தைகளை எபேசியர்களுக்கு எழுதினார். நிச்சயமாக அவர்கள் அப்போது மரண நிலையில் இல்லை. ஆகையால் அவர்கள் மரண நிலையிலிருந்து திரும்ப வர வேண்டுமென்று அப்போஸ்தலர் இந்த வார்த்தைகளின் மூலம் அர்த்தப்படுத்தியிருக்க மாட்டார். மேலும் அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்த நிலையிலிருந்து அவர்கள் எழுந்து வர வேண்டுமென்பதையும் அப்போஸ்தலர் இங்கே அர்த்தப்படுத்தவில்லை. ஏனென்றால் அவ்விதமான ஓர் மரணத்திலிருந்து அவர்கள் ஏற்கனவே எழுப்பப்பட்டிருந்தார்கள் *(எபே. 2:1,5).* அக்கிரமங்களினாலும் பாவங்களினாலும் மரிப்பதென்பது ஆதாமினால் வந்த மரண செயல்முறையை அர்த்தப்படுத்தும். அந்த நிலையிலுள்ளவர்கள் உண்மை நிகழ்வாக மரண நிலையில் இல்லையென்றாலும், ஏற்கனவே மரித்தவர்களாக, ஏற்கனவே மரண நிலையிலுள்ளவர்களாக தேவன் அவர்களைக் கருதுகிறார் *(மத். 8: 22; யோவா. 5: 25; 2 கொரி. 5: 14)).* மற்றொரு வகையான மரணமும் இருக்கிறது. அது சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்திருக்கும் பலியின் மரணமாகும் *(ரோம. 6: 2, 7, 8, 11; கொலோ. 2: 20; 3: 3; 2 தீமோ. 2: 11; 1 பேது. 2: 24; 4: 6).*

*23.* இங்கே மரித்தோர் என்று மொழி பெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை பன்மையிலிருக்கிறது. அது மரித்தவைகள் *(dead ones)* என்ற அர்த்தமுடையதாக இருக்கிறது. ஆனால் இங்கே பவுல் அப்போஸ்தலர் தனிப்பட்ட ஒரு கிறிஸ்தவனிடம் பேசுகிறார். “தூங்குகிற நீ” என்று சொல்கிறார். மேலும் “விழித்து” மற்றும் “எழுந்திரு” என்ற வினைச்சொற்களும் கிரேக்க மொழியில் ஒருமையிலிருக்கின்றன. இங்கே மரித்தவைகள் என்பது ஆதாமின் மரண நிலையையோ ஆதாமின் மரண செயல்முறையையோ குறிக்காதபோது, ஒவ்வொருவனும் மரித்தவர்களிலிருந்து எழுந்திருக்க வேண்டுமென்று அப்போஸ்தலர் எவ்வாறு சொல்லக்கூடும்? நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம். மரித்தவைகள் என்பது மரண நிலையில் வைக்கப்பட்ட நம்முடைய பாவமான மனுஷீக சுயநல மற்றும் உலக ரீதியான சித்தம் மனம் மற்றும் பற்றுதல்களாக இருக்கின்றன. ஏனென்றால் நாம் பிரதிஷ்டை செய்தபோது அவைகளை மரிக்கச் செய்தோம். மேலும் நாம் நம்முடைய பிரதிஷ்டையில் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருந்தால், அவைகளை மரித்த நிலையிலேயே வைப்போம். அதாவது நம்மைக் கட்டுப்படுத்துவதைப் பொறுத்தவரை அவைகள் செயலற்றிருக்கும்.

*24.* இந்த சுயநல பற்றுதல்களாவன: நம்மைக் குறித்து நமக்கு நல்ல அபிப்பிராயம் இருக்க வேண்டுமென்ற விருப்பம், நம்மைக் குறித்து மற்றவர்களுக்கு நல்ல அபிப்பிராயம் இருக்க வேண்டுமென்ற விருப்பம், ஓய்வு மற்றும் பாதுகாப்புக்கான விருப்பம், நமக்குத் தீங்கு விளைவிக்கும் காரியங்களை மறைப்பதற்கான விருப்பம், பூமிக்குரிய உடைமைகளைப் பெற்றுக் கொண்டு தக்கவைத்துக் கொள்வதற்கான விருப்பம், உணவு மற்றும் பானம் ஆகியவற்றிற்கான விருப்பம், ஆரோக்கியம் மற்றும் ஜீவனுக்கான விருப்பம், தற்பாதுகாப்பு விருப்பம், நமக்குத் தீமையானதை எதிர்த்துக் தாக்குதல் செய்வதற்கான விருப்பம். நம்முடைய மனுஷீக உலக ரீதியான பற்றுதல்களாவன: எதிர்பாலின விருப்பம்,

*கணவன், மனைவி, பிள்ளைகள், பெற்றோர்கள், சகோதரர்கள், சகோதரிகள், நண்பர்கள் ஆகியவர்களுக் கான விருப்பம், வீடு மற்றும் தேசத்திற்கான பற்று.*

*25.* நாம் நியாயமாக்கப்பட்ட பிறகும், பிரதிஷ்டை செய்ததற்கு முன்பும் மேலே சொல்லப்பட்ட காரியங்களில் ஒன்றோ அல்லது அதற்கு மேலான வைகளோ, பாவமான காரியங்களில் இல்லை என்றாலும் சுபாவ காரியங்களில் நம்முடைய சித்தத்தைக் கட்டுப் படுத்தி இருந்தன. நாம் நியாயமாக்கப்படுவதற்கு முன்பு இவைகளில் ஒன்றோ அல்லது அதற்கு மேலானவை களோ சேர்ந்து சுபாவ மற்றும் பாவமான காரியங்களில் நம்முடைய சித்தத்தைக் கட்டுப்படுத்தின. ஆனால் நாம் பிரதிஷ்டை செய்த பிறகு இந்த காரியங்களில் எதுவும், சுபாவ வழிகளிலோ, பாவமான வழிகளிலோ நம்முடைய சித்தமாக இருந்து நம்மைக் கட்டுப்படுத்தக் கூடாது. ஏனென்றால் பிரதிஷ்டை என்ற செயலின் மூலம் நாம் அவைகளை மரிக்க செய்தோம். ஆகையால் நம்முடைய பாவமான மனுஷீக பற்றுதல்கள், மனம் மற்றும் சித்தத் தைப் பொறுத்தவரை மனுஷர்களாக நாம் மரித்திருக் கிறோம். ஏனென்றால் நம் ஒவ்வொருவரிலுமுள்ள இந்த காரியங்களே நம்முடைய பாட வசனத்தில் சொல்லப் பட்ட மரித்தவைகளாக இருக்கின்றன.

## மரித்த மனுஷீக பற்றுதல்களிலிருந்து எழுந்திருப்பது

*26.* மரித்த நிலையிலுள்ள இந்த மனுஷீக சுய நலமான மற்றும் உலகரீதியான பற்றுதல்களிலிருந்து நாம் உயிர்த்தெழ வேண்டுமென்று, மறுபடியும் நிற்க வேண்டு மென்று பவுல் அப்போஸ்தலர் நம்முடைய பாட வசனத் தில் நமக்குப் புத்திமதி சொல்கிறார். உயிர்த்தெழுதல் எதை அர்த்தப்படுத்துகிறது என்று பலர் தவறாகப் புரிந்துகொள்கிறார்கள். மரணமென்னும் உணர்வற்ற நிலையிலிருப்பவர்கள் அனைவரும் எழுப்பப்படுவதை உயிர்த்தெழுதல் அர்த்தப்படுத்துகிறது என்று அவர்கள் தவறாக எண்ணுகிறார்கள். மேலும் உயிர்த்தெழுதல் என்ற வார்த்தைக்கு அவர்கள் கொடுக்கிற இந்த அர்த்தத்திற்கு ஒரு உதாரணமாக மரித்த ஒரு சிறுவனை எலியா எழுப்பு வது, மரித்த மற்றொரு சிறுவனை எலிசா எழுப்புவது; எலிசாவின் எலும்புகளின் மேல்பட்ட கள்ளனின் பிரேதம் உயிரடைவது ஆகிய நிகழ்வுகளைக் குறிப்பிடுகிறார்கள். யெஷுஆ மரித்தோரிலிருந்து எழுப்பின மூவர் எழுப் பப்பட்டதையும் சுட்டிக் காட்டுகிறார்கள். யவீருவின் குமாரத்தி, நாயீன் விதவையின் குமாரன், பெத்தானியா ஊரானாகிய லாசரு இந்த மூன்று பேர்களாக இருந் தார்கள். இந்த ஆறு பேர்களும் மரித்தோரிலிருந்து எழுப் பப்பட்டாலும், அவர்களில் ஒருவரும் கூட உயிர்த்தெழு தலை அடையவில்லை. ஏனென்றால் இந்த ஆறுபேர் மரித் தோரிலிருந்து எழுப்பப்பட்ட பிறகு மரித்தோரிலிருந்து எழுந்த யெஷுஆ "மரித்தோர் உயிர்த்தெழுதலில் அவர் முதல்வர்" என்று வேதாகமம் போதிக்கிறது *(அப்.26:23;* சொல்லர்த்தமாக இது மரித்தோரிலிருந்து, உயிர்த் தெழுந்த முதல் நபரை, அதாவது உயிர்த்தெழுதலை அனு பவித்த முதல் நபரைக் குறிக்கிறது; *1 கொரி. 15: 20; கொலோ. 1: 18; வெளி. 1: 5).*

*27.* அப்படியானால் இவ்விரண்டிலுமுள்ள வித்தியாசம் என்ன? எழுப்பப்படுதல் *(resuscitation)* என் பது ஒருவனுக்கு ஜீவனைத் திரும்ப கொடுப்பதை மட்டுமே அர்த்தப்படுத்தும். அந்த ஜீவன் பாவமற்றதாக அல்லது பாவமானதாக இருக்கக் கூடும், பூரணமானதாக அல்லது அபூரணமானதாக இருக்கக் கூடும். ஆனால் உயிர்த்தெழுதல் *(resurrection)* என்பது, அந்த செயலின் மூலம் ஒருவன் பாவமற்றவனாகவும், பூரணமான வனாகவும் ஆக்கப்படுவதை மட்டுமே அர்த்தப்படுத்தும் *(லூக். 20:35).* லூக். 20: 35, 36-ம் வசனங்களில் யெஷுஆ பின்வரும் காரியங்களைக் காண்பிக்கிறார்: *(1)* மில்லினிய யுகத்தை (மறுமையை), அதாவது ஜீவன் என்ற ஆசீர் வாதத்தை அடைவதற்கும், அந்த யுகம் கொண்டு வரும் உயிர்த்தெழுதலை அடைவதற்கும் (மரித்தோரிலிருந்து எழுந்திருத்தலையும்) ஒரு தகுதி தேவையாயிருக்கிறது (பாத்திரராக எண்ணப்படுவது), *(2)* அந்த உயிர்த்தெழு தலானது ஒருவனை பாவமற்றவனாகவும் பூரணமான வனாகவும் தேவ தூதர்களைப் போல் பாலின வேறுபாடு அற்றவனாகவும் ஆக்கும், *(3)* அது அவர்களைத் தேவ னுடைய பிள்ளைகளாக ஆக்கும், ஆனால் மரித்தவர்களில் பெரும்பான்மையோர், அதாவது ஆதாமினால் வந்த பாவத்தின் கீழ் மரித்த எல்லோரும் எழுப்பப்பட்டாலும், அவர்கள் ஜீவனின் ஆசீர்வாதங்களையும் உயிர்த்தெழு தலையும் அடைய தகுதியற்றவர்களாக இருப்பார்கள். அவர்கள் பாவமில்லாதவர்களாகவும், பூரணர்களாகவும், தேவ தூதர்களை போல் பாலின வேறுபாடு இல்லாத வர்களாகவும் இருக்க மாட்டார்கள். அவர்கள் நிச்சய மாகத் தேவனுடைய பிள்ளைகளாக இருக்க மாட்டார்கள். ஏனென்றால் மரணத்தில் எவ்வித மாற்றமும் இருப்ப தில்லை. அவர்கள் மரணத்திற்குள் எவ்வாறு பிரவேசித் தார்களோ அவ்வாறே திரும்ப வருவார்கள். அவர்கள் திரும்ப வரும்போது ஜீவனுக்கும் உயிர்த்தெழுதலுக்கும் தகுதியில்லாதவர்களாக இருப்பார்கள். தேவ தூதர்களைப் போலவும், தேவனுடைய பிள்ளைகளாகவும் இருக்க மாட்டார்கள்.

*28.* உயிர்த்தெழுதல் என்பது ஆதாமினால் மனு குலத்தின் மேல் வந்த மரண தண்டனையை முற்றிலும் திருப்பும். இந்த மரண தண்டனையில், மரண நிலையைச் சென்றடையும் வரை செயல்படுகிற, மரண செயல்முறை முழுவதிலும் நிகழ்கிற, சரீர மன கலை ஒழுக்க மத ரீதியான சீர்கேடும் அடங்கியுள்ளது. இவ்வாறாகப் பூரண நிலையிலிருந்து அபூரணமான நிலைக்கும் மரணத்திற்கும் விழுவது ஆதாமினால் வந்தது. கிறிஸ்துவின் மூலம் வரு கிற உயிர்த்தெழுதல் என்பது "மறுபடியும் எழுந்து நிற்பதை" *–restanding-(வீழ்ச்சியிலிருந்து)* அர்த்தப்படுத் தும். அது ஒருவனை மரணத்திலிருந்து ஜீவனுக்குத் திரும்பக் கொண்டு வருவது மட்டுமல்ல, அவனைச் சரீர ரீதியாகவும், மன ரீதியாகவும், கலை ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், மத ரீதியாகவும் பூரணமாகவும் ஆக்கும். அதாவது ஆதாமின் வீழ்ச்சிக்கு முன் அவர் இருந்த நிலைக்கு அவர்களைக் கொண்டு வரும்.

## மன இயல்பின் உயிர்த்தெழுதல்

*29.* தேவனுடைய பிள்ளைகளைப் பொறுத்த வரை, அவர்களுடைய உயிர்த்தெழுதல் இந்த வாழ்க்கை யிலே தொடங்கும். அதாவது உயிர்த்தெழுதலின் செயல் முறையின் ஒரு பகுதியை இப்போதே அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அந்த பகுதியானது, மனம், இருதயம் மற்றும் சித்தத்தில் எழுந்து நிற்பதாகும். அவர் கள் மரித்த நிலையிலுள்ள (அவர்களைக் கட்டுப்படுத் துவதைப் பொறுத்த வரை) அவர்களுடைய மனுஷீக சுய நலமான மற்றும் உலகத்தனமான சிந்தனைகள், பற்றுதல் கள் மற்றும் சித்தங்களிலிருந்து எழுந்து ராஜ்யத்திற்குரிய

*சிந்தனைகள், ராஜ்யத்திற்குரிய பற்றுதல்கள் மற்றும் ராஜ்யத்திற்குரிய சித்தங்களை அடைகிறார்கள். புது சிருஷ்டிகளைப் பொறுத்தவரை அவைகள் இந்த வாழ்க்கையிலே முழுமையாக அபிவிருத்தி அடைகின் றன. ஆகையால் யெஷுஆ அவர்களை மரித்தோரிலிருந்து எழுப்பும்போது அவர்களுடைய உயிர்த்தெழுதலின் சரீரங்களைப் பெற்றுக் கொள்ள ஆயத்தமுள்ளவர்களாக இருப்பார்கள்.*

*30. உலகத்தாரின் உயிர்த்தெழுதலைப் பொறுத்த வரை, மில்லினிய யுகத்தில் அவர்களுடைய உயிர்த் தெழுதல் பின்வரும் வரிசையில் நடைபெறும்: அப்போது வாழ்ந்து கொண்டிருப்பவர்கள் முதலாவதாக மறுசீரமைக் கப்படத் தொடங்குவார்கள். இவர்கள் ஓரளவிற்கு முன் னேற்றமடைந்த பிறகு மரணநிலையிலுள்ளவர்கள் எழுப் பப்படுவார்கள். அதற்குப் பிறகு அவர்களும் மறுசீரமைக் கப்படத் தொடங்குவார்கள். இந்த இரு வகுப்பார்களிலும் இந்த மறுசீரமைக்கப்படுதல் சரீர ரீதியாகவும், மன ரீதியாகவும், கலை ரீதியாகவும், ஒழுக்க ரீதியாகவும், மத ரீதியாகவும் படிப்படியாக நடைபெறும். மில்லினிய யுக முடிவில் அவர்கள், ஆதாமின் வீழ்ச்சிக்கு முன், அவரி லிருந்த பூரண நிலையிலிருப்பார்கள். இது அவர் களுடைய உயிர்த்தெழுதலின் செயலை நிறைவாக்கும்.*

*31. ஆனால் தெரிந்து கொள்ளப்பட்ட வகுப் பாரைப் பொறுத்தவரை, இந்த செயல்முறை இந்த வாழ்க்கையிலேயே தொடங்கும். மரித்த நிலையிலுள்ள (அவர்களைக் கட்டுப்படுத்துவதைப் பொறுத்தவரை) அவர்களுடைய மானிட சிந்தனைகள், பற்றுதல்கள் மற்றும் சித்தங்களிலிருந்து எழுந்து, பரத்துக்குரிய சிந்த னைகள் பரத்துக்குரிய பற்றுதல்கள் மற்றும் பரத்துக்குரிய சித்தங்களை முழுமையாக அடையும் வரை தொடர்ந்து நடைபெறும்.*

*32. [இந்த கட்டுரையானது ஆவியினால் ஜெநிப் பிக்கப்பட்டவர்களுக்கு, அதாவது புது சிருஷ்டிகளுக்கு விசேஷமாக எழுதப்பட்டது. அது முதன்மையான நிலை யில் அவர்களுக்குப் பொருந்தும் என்பதை இந்த கட்டுரையின் அறிக்கைகளிலிருந்து வெளிப்படையா யிருக்கிறது. ஆனால் இப்போது சுவிசேஷ யுகத்தின் முடிவு மற்றும் மில்லினிய யுகத்தின் ஆரம்ப காலத்தில், ஆவியினால் ஜெநிப்பிக்கப்படவில்லையென்றாலும், பிரதிஷ்டை செய்து ஆவியினால் பிரகாசிப்பிக்கப்பட்டு, ஆவியினால் ஊக்குவிக்கப்படுகிறவர்கள் அபிவிருத்தி செய்யப்பட்டுக் கொண்டு வருகிறார்கள். அவர்களுக்கும் இந்த காரியங்களின் அடிப்படை பொருந்தும். ஏனென் றால் அவர்களும் பிரதிஷ்டை செய்த பிறகு, அந்த பிரதிஷ் டையைச் சரியாக நிறைவேற்றினால், இந்த வாழ்க் கையிலேயே உயிர்த்தெழுதலின் செயல் முறையின் ஒரு பகுதியை அனுபவிக்கிறார்கள். அதாவது அவர்கள் மரித்த நிலையிலுள்ள அவர்களுடைய பழைய மனுஷீக சுயநல மற்றும் உலகத்தனமான சிந்தனைகள் பற்றுதல்கள் மற்றும் சித்தங்களிலிருந்து எழுந்து புதுப்பிக்கப்பட்ட ஜீவனையும், புதுப்பிக்கப்பட்ட மனம், இருதயம் மற்றும் சித்தத்தில் எழுந்து நிற்பதையும் அடைகிறார்கள். இந்த புதுப்பிக்கப்பட்ட ஜீவன் அவர்களுடைய மனுஷீக சிந்தனைகள், பற்றுதல்கள் மற்றும் சித்தங்களைக் கட்டுப் படுத்தும்.*

*33. மனுஷீக மனம் பற்றுதல்கள் மற்றும் சித்தத் திற்கு மரித்திருப்பதைக் குறித்து இங்கே குறிப்பிடும் போது, பிரதிஷ்டை செய்த ஒருவன் இனி அவைகளை எவ்விதத்திலும் முற்றிலும் அப்பியாசிக்கக் கூடாது என் பதை இது அர்த்தப்படுத்தாது. அவர்கள் அவைகளை அவைகளுக்குரிய தகுதியான, கீழ்ப்பட்ட முறையில் உபயோகிக்கக் கூடும். இவ்வாறாக நாம் வாழ்க்கை துணை அல்லது குடும்பத்தின் மீதுள்ள விருப்பத்திற்கு மரித்தவர்களாயிருக்கும் போது, நாம் அவர்களிடத்தில் குறைவாக அன்பு கூருகிறோம் என்பதை இது அர்த்தப் படுத்தாது. மாறாக நாம் அவர்கள் மீது கொண்டுள்ள அன்பானது புதுப்பிக்கப்பட்ட மனம், இருதயம் சித்தத் திற்குக் கட்டுப்பட்டிருக்கும் என்பதை அர்த்தப்படுத்தும். உண்மையாகச் சொன்னால், ஒருவன் பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவனாக ஆகும்போது, அவன் முன்பிருந்ததை விட சிறந்த வாழ்க்கை துணையாகவும் குடும்ப அங்கத்தின னாகவும் இருப்பான். பொதுவாகச் சொன்னால், அவன் முன்பிருந்ததை விட சிறந்த மனிதனாக இருப்பான்].*

*34. இவ்வாறாக (1) நம்மைக் குறித்து நமக்கொரு நல்ல அபிப்பிராயம் இருக்க வேண்டும் என்ற விழுந்து போன மனுஷீக விருப்பம் மரித்த நிலையில் இருக்கும், நாம் அதிலிருந்து எழுந்து மேலான விதத்தில் நம்மைக் குறித்து நல்ல அபிப்பிராயம் கொள்ள வேண்டும் என்ற ஜீவனுள்ள நிலையை அடைய வேண்டும். (2) மற்றவர் களுக்கு நம்மைக் குறித்து ஒரு நல்ல அபிப்பிராயம் இருக்க வேண்டுமென்ற விழுந்துபோன மனுஷீக விருப்பம் மரித்த நிலையிலிருக்கும். நாம் அதிலிருந்து எழுந்து தேவன் கிறிஸ்து மற்றும் சகோதரர்கள் நம்மைக் குறித்து நல்ல அபிப்பிராயம் கொள்ள வேண்டுமென்ற ஜீவனுள்ள மேலான விருப்பத்தை நாம் அடைய வேண்டும், (3) விழுந்துபோன மனுஷீக ஓய்வுக்கான விருப்பம் மரித்த நிலையில் இருக்கும். நாம் அதிலிருந்து எழுந்து தேவ சமாதானமென்னும் ஆவிக்குரிய ஓய்வின் மீது ஜீவனுள்ள மேலான விருப்பத்தை நாம் அடைய வேண்டும். (4) நம்முடைய விழுந்துபோன மனுஷீக பாது காப்பிற்கான விருப்பம் மரண நிலையிலிருக்கும். நாம் அதிலிருந்து எழுந்து ஆவிக்குரிய பாதுகாப்பிற்கான ஜீவனுள்ள மேலான விருப்பத்தை நாம் அடைய வேண்டும். (5) நம்முடைய மனுஷீகத்திற்குத் தீங்கு விளை விக்கும் காரியங்களை மறைப்பதற்கான விழுந்துபோன மனுஷீக விருப்பம் மரித்த நிலையில் இருக்கும். நாம் அதிலிருந்து எழுந்து, நமக்கு ஆவிக்குரிய ரீதியில் தீங்கு விளைவிக்கும் காரியங்களை மறைப்பதற்கான ஜீவ னுள்ள மேலான விருப்பத்தை அடைய வேண்டும். (6) பூமிக்குரிய உடைமைகளைப் பெற்றுக் கொண்டு தக்க வைத்துக் கொள்வதற்கான விழுந்துபோன மனுஷீக விருப்பம் மரித்தநிலையிலிருக்கும். நாம் அதிலிருந்து எழுந்து ஆவிக்குரிய உடைமைகளைப் பெற்றுக் கொண்டு தக்க வைத்துக் கொள்வதற்கான மேலான விருப்பத்தை அடைய வேண்டும். (7) விழுந்துபோன மனுஷீக உணவு மற்றும் பானத்திற்கான விருப்பத்திலிருந்து எழுந்து, பரத்துக்குரிய உணவு மற்றும் பானத்திற்கான (மனம், இருதயம் மற்றும் சித்தத்திற்கு ஆகாரமாகிய தேவ வார்த்தை) மேலான விருப்பத்தை அடைய வேண்டும். (8) மனுஷீக ஆரோக்கியம் மற்றும் ஜீவனுக்கான விழுந்து போன மனுஷீக விருப்பத்திலிருந்து எழுந்து, ஆவிக்குரிய ஆரோக்கியம் மற்றும் ஜீவனுக்கான மேலான விருப் பத்தை அடைய வேண்டும். (9) மனுஷீக தாக்குதல்களுக்கு எதிராக நம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான விழுந்து போன மனுஷீக விருப்பத்திலிருந்து எழுந்து, ஆவிக்குரிய தாக்குதல்களுக்கு எதிராக நம்மைப் பாதுகாத்துக் கொள் வதற்கான புதிய ஆவிக்குரிய விருப்பத்தை அடைய வேண்டும். (10) மனுஷீகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் காரியங்களை அழிப்பதற்கான விழுந்துபோன மனுஷீக விருப்பத்திலிருந்து எழுந்து, ஆவிக்குரிய ரீதியில் தீங்கு*

விளைவிக்கும் காரியங்களை அழிப்பதற்கான மேலான விருப்பத்தை அடைய வேண்டும். இதைத் தொடர்ந்து செய்வதென்பது நம்முடைய விழுந்துபோன சுயநலமான மனுஷீக பற்றுதல்களைத், தகுந்த மேலான சுயநலமான *(ஆனால் பாவமில்லாத)* பற்றுதல்களாக மாற்றும். இவ்வாறாக நாம் சரியான தாழ்நிலை முதன்மை சுயநல குணநலன்களை அபிவிருத்தி செய்து கொள்வோம்.

*35.* அதுபோலவே நாம் மரித்த நிலையிலுள்ள நம்முடைய உலக ரீதியான அல்லது சமூகம் சார்ந்த விழுந்துபோன மனுஷீக பற்றுதல்களிலிருந்து எழுந்து, அவைகளுக்கு இணையான மேலான சமூகம் சார்ந்த பற்றுதல்களை அடைய வேண்டும். இவ்வாறாக சபை வகுப்பாரைப் பொறுத்தவரை *(1)* சபை வகுப்பாரின் எதிர்பாலின மனுஷீக விருப்பம் மரித்த நிலையிலிருந்தது. அவர்கள் அதிலிருந்து எழுந்து, அவர்களுடைய பரத்துக்குரிய மணவாளனாகிய யெஷூஆவின் மீது ஜீவனுள்ள பரத்துக்குரிய பற்றை அடைந்தார்கள். *(2)* மனுஷீக வாழ்க்கை துணைக்கான அவர்களுடைய மனுஷீக விருப்பம் மரித்த நிலையிலிருந்தது. அவர்கள் அதிலிருந்து எழுந்து பரத்துக்குரிய வாழ்க்கை துணையின் மீது ஜீவனுள்ள பரத்துக்குரிய பற்றை அடைந்தார் கள். *(வாக்குத்தத்தங்களின் ஊழியக்காரர்களாக அவர்கள் யாவே தேவனுடைய உருவகமான மனைவியின் பகுதிகளாக இருந்தார்கள்).* நம்மைப் பொறுத்தவரை *(3)* மானிட பிள்ளைகளுக்கான நம்முடைய விழுந்துபோன மனுஷீக விருப்பம் மரித்த நிலையிலிருக்கும். நாம் அதிலிருந்து எழுந்து இப்போது நம்முடைய உடன்படிக்கையில் நமக்கிருக்கிற ஆவிக்குரிய பிள்ளைகளின் மேல் ஜீவனுள்ள மேலான பற்றையும், வருங்காலத்தில் இழந்ததைத் திரும்பப் பெறும் வகுப்பாருக்கான ஜீவனுள்ள மேலான பற்றையும் அடைய வேண்டும். *(4)* நம்முடைய பூமிக்குரிய பெற்றோர்களின் மேலுள்ள விழுந்துபோன மனுஷீக அன்பிலிருந்து எழுந்து, நம்முடைய பிதாவாகிய தேவனிடத்திலும் நம்முடைய தாயாகிய உடன்படிக்கையினிடத்திலும் மேலான அன்பை அடைய வேண்டும். *(5)* நம்முடைய பூமிக்குரிய சகோதரர்கள் மற்றும் சகோதரிகளுக்கான விழுந்துபோன மனுஷீக விருப்பம் மரித்த நிலையிலிருக்கும். நாம் அதிலிருந்து எழுந்து நம்முடைய ஆவிக்குரிய சகோதரர் மற்றும் சகோதரிகளின் மீது மேலான அன்பை அடைய வேண்டும். *(6)* நம்முடைய பூமிக்குரிய நண்பர்களின் மேலுள்ள விழுந்துபோன மனுஷீக அன்பிலிருந்து எழுந்து, நம்முடைய ஆவிக்குரிய நண்பர்களுக்கான மேலான அன்பை அடைய வேண்டும். *(7)* நம்முடைய பூமிக்குரிய வீடுகளின் மேலுள்ள விழுந்துபோன மனுஷீக பற்றிலிருந்து எழுந்து, நம்முடைய உயிர்த்தெழுதலின் சரீரமாகிய நம்முடைய ராஜ்யத்திற்குரிய வீட்டின் மேல் மேலான பற்றை அடைய வேண்டும். *(8)* நம்முடைய பூமிக்குரிய தேசத்தின் மேலுள்ள விழுந்துபோன மனுஷீக பற்றிலிருந்து எழுந்து, நம்முடைய ஆவிக்குரிய தேசமாகிய சத்தியம் மற்றும் அதின் ஆவியின் செயல் எல்லையின் மேல் ஆவிக்குரிய பற்றை அடைய வேண்டும். இவ்வாறாக நாம் மேலான சமூகரீதியான பற்றுதல்களை அபிவிருத்தி செய்து கொள்வோம். நாம் அதைத் தொடர்ந்து செய்யும்போது சரியான தாழ்நிலை முதன்மை சமூகரீதியான குணநலன்களை வளர்த்துக் கொள்வோம்.

*36.* நாம் இதை எவ்வாறு செய்ய வேண்டுமென்ற கேள்வி எழும்புகிறது? நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம்: *(1)* நம்முடைய புதுப்பிக்கப்பட்ட சித்தமானது நம்முடைய பழைய விழுந்துபோன மனுஷீக சுயநல மற்றும் சமூக மென்னுணர்வுகளை மரித்த நிலையில் வைக்க வேண்டும். அதாவது அவைகள் நம்மைக் கட்டுப்படுத்தாதபடி அவைகளை மரித்த நிலையிலேயே வைக்க வேண்டும், *(2)* ஆவியின் பிரகாசிப்பித்தலின் மூலம் நம்முடைய புதுப்பிக்கப்பட்ட மனுஷீக சுயநல மற்றும் சமூக மென்னுணர்வுகளுக்கு அளிக்கப்படுகிற திறமைகளை அப்பியாசிக்க வேண்டும். நம்முடைய பற்றுதல்கள் இயல்பாகப் பற்றிக் கொள்கிற மானிட இலக்குகளுக்கு அப்பால் சென்று அவைகளுக்கொத்த மேலான இலக்குகளைப் பற்றிக் கொள்ள இந்த திறமைகள் அவைகளுக்குத் திராணி அளிக்கும். இந்த திறமைகள் இந்த மேலான இலக்குகளைப் பற்றிக் கொண்டு அவைகளை அப்பியாசிக்கும் படி புதுப்பிக்கப்பட்ட சித்தம் செய்யும். மேலானவைகளைப் பற்றிய அறிவோடு இணைந்த இந்த புதுப்பிக்கப்பட்ட சித்தமானது உயர்நிலை முதன்மை குணநலன்களாகிய விசுவாசம், நம்பிக்கை, சுயகட்டுப்பாடு, பொறுமை, தேவபக்தி, சகோதர சிநேகம், தியாக அன்பு ஆகியவைகளின், இணைப்பாக இருக்கிறது. வேறு வார்த்தைகளில் சொன்னால் ஞானம், வல்லமை, நீதி மற்றும் அன்பென்பவைகளின் இணைப்பாக இருக்கிறது.

## கொலோ. *3:1-3* மற்றும் ரோம. *6:3-5* வரையுள்ள வசனங்களின் சான்று

*37.* மனம், இருதயம் மற்றும் சித்தத்தின் உயிர்த்தெழுதலின் மூலம் நம்முடைய பூமிக்குரிய பற்றுதல்களை மேலானவைகளாக மாற்றும் இந்த முழு செயல்முறையானது, அதாவது நம்முடைய மறுரூபமாகுதலானது, நம்முடைய பாட வசனத்தைத் தவிர மற்ற பல வேத வசனங்களிலும் போதிக்கப்படுகிறது. அவைகளில் சிலவற்றை நாம் விளக்குவோம்.

*38.* கொலோ.*3:1-3:* கொலோ.*3:1*-ம் வசனத்தில், சுவிசேஷ யுகத்தில் சபை வகுப்பார் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் செயல்முறையில் அவரோடிணைந்து, அவர்களுடைய உயிர்த்தெழுதலின் செயல்முறையை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள் *(நீங்கள் கிறிஸ்துவுடன் கூட எழுந்ததுண்டானால்).* ஆகையால் அவர்கள் பரத்துக்குரிய பற்றுதல்களை அபிவிருத்தி செய்து கொள்ள நாட வேண்டியதாயிருந்தது. அதாவது பரத்துக்குரிய காரியங்களின் மேலுள்ள அன்பை அவர்களுடைய மேல்நோக்கு ஆசையின் இலக்காக ஆக்கிக் கொள்ள வேண்டியதாயிருந்தது. *(மேலானவைகளைத் தேடுங்கள்).* இந்த காரியங்களைக் கிறிஸ்து ஏற்கனவே அடைந்திருந்தார் *(கிறிஸ்து தேவனுடைய வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் இடத்திலுள்ள).*

*39.* கொலோ. *3:2*-ம் வசனத்தில், அவர்களுடைய பற்றுதல்களை பரத்துக்குரிய காரியங்களின் மேல் உறுதியாக வைப்பதின் மூலமும், பிரிக்கப்பட முடியாத விதத்தில் அவைகளைப் பற்றிக் கொள்வதின் மூலமும், இது செய்யப்படுமென்று அப்போஸ்தலர் காண்பிக்கிறார். அதாவது சபை வகுப்பார் பரமபிதாவையும், கர்த்தராகிய யெஷூஆவையும், சகோதரர்களையும் பரத்துக்குரிய குணாம்சத்தையும், சுதந்தரத்தையும், கனத்தையும், அலுவல்களையும், உறவுகளையும் அடைய நாட வேண்டியதாயிருந்தது *(மேலானவைகளையே நாடுங்கள்).* மேலும் பூமிக்குரிய காரியங்களிலிருந்து அவர்களுடைய பற்றுதல்களை அகற்றுவதின் மூலமும் இதைச் செய்ய வேண்டியதாயிருந்தது *(பூமியிலுள்ளவைகளை அல்ல).*

*40.* அவர்கள் மனுஷர்களாக மனுஷீக சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்து *(நீங்கள் மரித்தீர்கள்)*

பிரதிஷ்டையில் தேவனுடைய சித்தத்தைத் தங்களுடைய சித்தமாக ஆக்கிக் கொண்டு தேவனுக்குள் வருவதின் மூலம் யெஷுஆவோடு இணைந்து புது சிருஷ்டிகளாக ஜீவனை அடைந்ததால் (உங்கள் ஜீவன் கிறிஸ்துவுடனே தேவனுக்குள் மறைந்திருக்கிறது), இந்த காரியங்களைச் செய்ய வேண்டியதாயிருந்தது (ஏனென்றால்).

*41.* ரோம.6:3-5 வரையுள்ள வசனங்களும் இந்த கருத்தை காண்பிக்கின்றன: ரோம.6:3-ம் வசனத்தில் அப்போஸ்தலர் சபை வகுப்பாரின் நீர் மூழ்க்கு ஞானஸ்நானத்தைக் குறித்து சொல்லவில்லை. ஏனென்றால் இவ்வசனத்தில் அவர் சபை வகுப்பார் கிறிஸ்து யெஷுஆவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக் கொள்வதைக் குறித்து சொல்கிறார் (கிறிஸ்து யெஷுஆவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாம் அனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?). இதன் பொருள் இவ்வாறாயிருக்கிறது: இவ்வாறு ஞானஸ்நானம் பெற்றவர்கள் மரண பரியந்தமும் அவர்களுடைய சித்தத்தை யெஷுஆவின் சித்தத்திற்குள் மூழ்க செய்தார்கள். இவ்வாறாக அவர்கள் அவருடைய சரீர அங்கத்தினர்களாக ஆனார்கள். இது அவர்களில் மரணத்தை விளைவித்தது, அதாவது கிறிஸ்துவின் மரணத்திற்கொத்த பலியின் மரணத்தை விளைவித்தது (கலா. 2: 20; 3: 27; 1 கொரி. 12: 12, 13; ரோம. 8: 10). அவர்கள் யெஷுஆவோடும் விசுவாச உண்மைத்துவமுள்ள மற்ற தேவ ஜனங்களோடும் மரணத்திற்குள்ளான ஞானஸ்நானத்தை அனுபவித்துக் கொண்டிருந்தார்கள் என்பது, அவர்கள் யெஷுஆவிற்குள்ளாக, அதினால் அவருடைய மரணத்திற்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டார்கள் என்ற உண்மையிலிருந்து தெளிவாகிறது [அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப் பட்டோம் (இது நீர் மூழ்க்கு ஞானஸ்நானத்தை அல்லாமல், உண்மையான ஞானஸ்நானத்தை குறிக்கிறது); மாற். 10: 38, 39; லூக். 12: 50; 1 கொரி. 15: 29; கொலோ. 2: 12]. இந்த வேத வசனங்கள் உண்மையான ஞானஸ்நானத்தைப் போதிக்கின்றன.

*42.* இவ்வசனங்களில் அப்போஸ்தலர் கிறிஸ்து யெஷுஆவுக்குள்ளாக அவர்கள் பெற்றுக் கொண்ட ஞானஸ்நானம் மரணத்திற்குள்ளான ஞானஸ்நானமாகும் என்று வலியுறுத்துகிறார். இது பின்வரும் காரியத்தை அர்த்தப்படுத்தும்: சோதனை மயமான அனுபவங்களின் மத்தியில் பலியின் ஊழியத்தைச் செய்வதினால் அவர்களுடைய மனுஷீக சரீரம் படிப்படியாக மரித்து கொண்டிருக்கையில், சுயம் மற்றும் உலகம் சார்ந்த அவர்களுடைய மனுஷீக சித்தம் மரண நிலையிலேயே வைக்கப்பட வேண்டும். இவ்வாறாக யெஷுஆவின் மரணத்திற்கொத்த மரணத்தை அடைவதற்கு, அவர்கள் மரண பரியந்தமும் பாடுபடுவதற்கான காரணத்தை அப்போஸ்தலர் இங்கு காண்பிக்கிறார் (ரோம.6:4). அந்த காரணமென்னவென்றால், கிறிஸ்து ஜீவனுக்கென்று உயிர்த்தெழுதலை அடைந்தது போல், அவர்களும் உயிர்த்தெழுதலை அடைய வேண்டும் என்பதாகும். அவர்கள் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்வதே இந்த உயிர்த்தெழுதலாகும் என்று அப்போஸ்தலர் காண்பிக்கிறார். இவ்வாறாக அவர்கள் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்வதே, யெஷுஆ அனுபவித்த உயிர்த்தெழுதலுக்கு ஒத்த உயிர்த்தெழுதலாகும் என்று அப்போஸ்தலர் இங்கு காண்பிக்கிறார் (பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல, நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு).

*43.* இங்கே குறிப்பிடப்பட்ட யெஷுஆவின் உயிர்த்தெழுதலானது, அவர் சிலுவையில் அறையப்பட்ட பிறகு மூன்றாம் நாளிலே அனுபவித்த உயிர்த்தெழுதல் அல்ல. ஏனென்றால் இங்கே குறிப்பிடப்பட்ட அவருடைய உயிர்த்தெழுதலானது, சபை வகுப்பார் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும் போது அனுபவிக்கிற அதே வகையான உயிர்த்தெழுதல் ஆகும். ஏனென்றால் அது சபை வகுப்பாரின் புதிதான ஜீவனில் இருந்த காரியத்திற்கொத்ததாக இருந்தது என்று பவுல் அப்போஸ்தலர் சொல்கிறார் (கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல் ... நாமும் நடந்து கொள்ள வேண்டும்). அப்படியானால், இங்கே குறிப்பிடப்பட்ட யெஷுஆவின் உயிர்த்தெழுதல் என்ன? மரித்த நிலையிலுள்ள அவருடைய பாவமில்லாத மனுஷீக பற்றுதல்களிலிருந்து (சுயம் மற்றும் உலகம் சார்ந்த பற்றுதல்கள்) எழுந்து, மரித்த நிலையிலுள்ள மானிட பற்றுதல்கள் பற்றிக் கொண்டிருந்த இலக்குகளுக்கு இணையான ஆவிக்குரிய இலக்குகளுக்கான (ஆவிக்குரிய தளத்திலுள்ள காரியங்கள்) பரத்துக்குரிய பற்றுதல்களை அடைவதே இங்கே குறிப்பிடப்பட்ட உயிர்த்தெழுதலாகும். ஒரு புதுசிருஷ்டியாக அவர் மரித்த நிலையிலுள்ள மனுஷீக பற்றுதல்களிலிருந்து எழுந்து, ஜீவனுள்ள பரத்துக்குரிய பற்றுதல்களை அடைந்தார். நாம் மேலே பார்த்ததை போல் சபை வகுப்பார் அனுபவித்த அதே வகையான மனம், இருதயம் மற்றும் சித்தத்தின் உயிர்த்தெழுதலை யெஷுஆவும் அனுபவித்தார். இதுவே ரோம. 6:4ம் வசனத்தில் விவரிக்கப்பட்ட யெஷுஆவின் உயிர்த்தெழுதலாகும்.

*44.* யெஷு ஆ இந்த உயிர்த்தெழுதலை எவ்வாறு அனுபவித்தார் என்பதை பார்ப்போம். பிதாவின் மகிமையினாலே அதை அவர் அனுபவித்தார் என்று ரோம. 6:4-ம் வசனம் சொல்கிறது. தேவனுடைய மகிமை என்பது, பிரதானமாக அவருடைய குணாம்சத்தின் பேரழகாகும். அதில் அடங்கியுள்ள காரியங்களாவன: (1) ஞானம், வல்லமை, நீதி மற்றும் அன்பென்ற இயல்புகள் ஒவ்வொன்றும் தன்னில் தானே பூரணமாயிருக்கும், (2) ஒவ்வொன்றும் மற்றவைகளோடு அதற்கிருக்கும் இசைவிணக்கத்தில் பூரணமாயிருக்கும், (3) இவ்வித பூரண இசை விணக்கத்திலுள்ள இந்த குண இயல்புகளெல்லாம் அவருடைய மற்ற குண இயல்புகளை ஆண்டு கொள்ளும், நிச்சயமாக இதுவே தேவனுடைய மகிமையாகும் - அவருடைய மகிமையான குணாம்சமாகும்.

*45.* யெஷுஆ சுய சித்தத்திற்கும் உலக சித்தத்திற்கும் மரித்திருந்து, தேவனுடைய குணாம்சத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய சித்தத்திற்கென்று ஜீவிப்பதின் மூலம், தேவனுடைய குணாம்சத்தை தம்முடைய குணாம்சமாக ஆக்கிக் கொண்டார். இந்த தேவனுடைய குணாம்சமானது பூரண மனுஷீக நிலையிலுள்ள அவருடைய மனம், இருதயம் மற்றும் சித்தத்தைப் பூரண தெய்வீக நிலைக்கு மறுரூபமாக்கினது. இந்த மறுரூபமாகுதல் நிறைவடைவதற்கு 3 ½ வருடங்கள் தேவைப்பட்டன. இந்த மறுரூபமாகுதலே, ரோம. 6:4-ம் வசனத்தில் சொல்லப்பட்ட யெஷுஆவின் உயிர்த்தெழுதலாக இருந்தது. அவர் மரணத்தை விளைவிக்கும் விதத்திலும் மரணபரியந்தமும், அவருடைய பிரதிஷ்டையை விசுவாச உண்மைத்துவத்துடன் நிறைவேற்றி முடித்த போது இந்த உயிர்த்தெழுதல் நிறைவடைந்தது. அவர் சிலுவையில் அறையப்பட்ட பிறகு மூன்றாம் நாளிலே தேவன் அவருக்கு வெகுமதியாகத் தெய்வீக சரீரத்திலே

உயிர்த்தெழுதலை அளித்தார். இந்த செயலின் மூலம் அவருடைய உயிர்த்தெழுதல் நிறைவடைந்தது.

*46.* ரோம. 6:5-ம் வசனத்தில் அப்போஸ்தலர் சபை வகுப்பாருக்குப் பின்வரும் நிச்சயத்தைக் கொடுக் கிறார்: யெஷுஆவின் முன்மாதிரியைப் பின்பற்றி சபை வகுப்பார் அவர்களுடைய மரணத்திற்குள்ளான ஞான ஸ்நானத்தை நிறைவேற்றினால் (அவருடைய மரணத்தின் சாயலில் நாம் இணைக்கப்பட்டவர்களானால்), அவர்கள் அவர்களுடைய மனம், இருதயம் மற்றும் சித்தத்தின் உயிர்த்தெழுதலை நிறைவாக்கிக் கொள்வார்கள். மேலும் அவர் அவருடைய மனம், இருதயம் மற்றும் சித்தத்தின் தெய்வீக உயிர்த்தெழுதலை நிறைவாக்கிக் கொண்ட பிறகு, தெய்வீக சரீரத்திலே உயிர்த்தெழுதலை பெற்றுக் கொண்டதைப் போலவே, சபை வகுப்பாரும் மனம், இருதயம் மற்றும் சித்தத்தின் உயிர்த்தெழுதலை நிறை வாக்கிக் கொண்ட பிறகு தெய்வீக சரீரத்தில் உயிர்த் தெழுதலைப் பெற்றுக் கொள்வார்கள் (அவர் உயிர்த் தெழுதலின் சாயலிலும் இணைக்கப்பட்டிருப்போம்).

## கொலோ. *2:11,12* மற்றும் மற்ற வசனங்களின் சான்று

*47.* கொலோ. *2:11,12*-ம் வசனங்களும் நமக்கு இதே கருத்தைக் கொடுக்கின்றன. *11*-ம் வசனத்தில், விசுவாச உண்மைத்துவமுள்ளவர்கள் கையால் செய்யப் படாத ஒரு விருத்தசேதனத்தைப் பெற்றுக் கொள் கிறார்கள் என்று பவுல் அப்போஸ்தலர் சொல்கிறார். அதாவது, இது யூதர்கள் மாம்சத்தில் பெற்றுக் கொள்கிற விருத்தசேதனமல்ல என்று காண்பிக்கிறார். இதை அவர் கிறிஸ்துவைப் பற்றும் விருத்தசேதனம் என்று அழைக் கிறார். அந்த விருத்தசேதனத்தினாலே அவர்கள் பாவஞ் செய்த அவர்களுடைய மனுஷீகத்தைக் களைந்து விடு கிறார் என்று அவர் சொல்கிறார். பிரதிஷ்டையிலும் இதே கருத்து அடங்கி இருக்கிறது. மாம்சத்திற்குரிய விருத்த சேதனமானது இருதயத்தின் விருத்தசேதனமாகிய பிரதிஷ் டையை அடையாளப்படுத்துகிறது (ரோம *2:28,29*). மாம்சத்திற்குரிய விருத்தசேதனமானது பிரதிஷ்டையில் அடங்கியுள்ள இரு காரியங்களையும் அடையாளப் படுத்துகிறது. அந்த இரு காரியங்களாவன: (1) சோதனை மயமான அனுபவங்களின் மத்தியில் பலியின் ஊழியத் தைச் செய்வதினால் சரீரம் மரண பரியந்தமும் பலி செய்யப்படும் போது சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித் திருப்பது; மற்றும் (2) புது சிருஷ்டியானது மரித்த நிலை யிலுள்ள சுயநலமான மற்றும் உலகத்தனமான மென் னுணர்வுகளிலிருந்தும் பண்புகளிலிருந்தும் எழுந்து, அவைகளுக்கொத்த பரத்துக்குரிய மென்னுணர்வுகளை யும் பண்புகளையும் அடையும்.

*48.* விருத்தசேதனமானது பிரதிஷ்டையின் இந்த அம்சங்களை எவ்வாறு அடையாளப்படுத்துகிறது என் பதைக் கவனிப்போம். முதலாவதாக நுனித்தோல் வெட்டப்படும். இது சுய சித்தத்தையும் உலக சித்தத் தையும் விட்டுவிடுவதை அடையாளப்படுத்தும். அடுத்த தாக விருத்தசேதனம் பெற்றுக் கொள்கிறவனின் நுனித் தோல் வெட்டப்படுவதினால் அவனுடைய இரத்தம் சிந்தப்படும். இது மனுஷீக சரீரத்தின் மரணத்தை அடையாளப்படுத்தும். ஏனென்றால் சிந்தப்பட்ட ரத்தம் மரணத்தை அடையாளப்படுத்தும். ஊழியத்தின் சோதனை மயமான செயல்களின் மூலம் சரீரம் மரணபரியந்தமும் பலி செய்யப்படும் போது சித்தம் சுயத்திற்கும் உலகத் திற்கும் தொடர்ந்து மரித்திருப்பது மூலம் இந்த பலியின் மரணம் அனுபவிக்கப்படுகிறது. சிந்தப்பட்ட ரத்தம் மரணத்தை அடையாளப்படுத்துகிறது என்ற உண்மை யினாலே, வேதாகமம் நம்முடைய மீட்பின் காரணமாகிய யெஷுஆவின் மரணம் மற்றும் யெஷுஆவின் ரத்தம் என்ற வார்த்தைகளை ஒரே அர்த்தத்தில் பலமுறை உபயோகிக்கிறது. இவ்வாறாக விருத்தசேதனமானது பிரதிஷ்டையின் முதலாம் பகுதியை எவ்வாறு அடை யாளப்படுத்துகிறது என்று நாம் காண்கிறோம்.

*49.* பிரதிஷ்டையின் இரண்டாம் பகுதியும் விருத்தசேதனத்தை அடையாளப்படுத்துகிறது. விருத்த சேதனம் பண்ணப்பட்ட நிலையின் ஒரு பகுதியாக அந்த காயம் குணமாகத் தொடங்குவதைப் போலவே, நாம் மரித்த நிலையிலுள்ள நம்முடைய விழுந்துபோன மனம், இருதயம் மற்றும் சித்தத்திலிருந்து எழுந்து, புதுப்பிக் கப்பட்ட மனம், இருதயம் மற்றும் சித்தத்தை அடை கிறோம். அதாவது நம்முடைய மனுஷீக பெலவீனங் களிலிருந்து ஆவிக்குரிய குணமாகுதலை அடைந்து, தொடர்ந்து பெருகிக் கொண்டிருக்கிற ஆவிக்குரிய ஆரோக்கியத்தை அடையத் தொடங்குவோம். மற் றெல்லா காரியங்களும் சமமாக இருக்கும்போது, விருத்த சேதனம் பண்ணப்பட்ட நிலையானது, விருத்தசேதனம் பண்ணப்படாத நிலையை விட அதிக ஆரோக்கியமான நிலையாகும். இவ்வாறாக மேலே விவரிக்கப்பட்ட ஆவிக் குரிய குணமாகுதல் நிறைவடையும்போது ஆவிக்குரிய ஆரோக்கியம் முழுமையாக நிறைவடையும். இந்த நிலை யானது, பிரதிஷ்டை செய்யாதவர்களின் ஒழுக்க ரீதியான ஆரோக்கியத்தை விட மிக சிறந்த நிலையாகும்.

*50.* கொலோ. *2:12*-ம் வசனமானது, ரோம. *6:3,4*-ம் வசனங்களிலுள்ள அதே கருத்தைக் கொடுக்கிறது. முதலாவதாக நீர் மூழ்க்கு ஞானஸ்நானத்தை அல்லாமல் மரணத்தைக் குறிக்கிறது [ஞானஸ்நானத்திலே அவ ரோடே கூட (யெஷுஆவோடே கூட) அடக்கம் பண்ணப் பட்டவர்களாக] அதற்குப்பிறகு ஜீவனுக்கான ஞான ஸ்நானத்தைக் குறித்துக் கூறுகிறது. அதாவது புதிதான உயிர்த்தெழுதலின் ஜீவனுக்குள், புதுமனம், இருதயம் மற்றும் சித்தம் எழுந்திருப்பதைக் குறிப்பிடுகிறது [அதிலே (இந்த ஞானஸ்நானத்திலே) ... அவரோடே கூட எழுந்தவர்களாகவும் இருக்கிறீர்கள் (மனுஷீக மரணத் திற்குக் கூடுதலாக, யெஷுஆ அனுபவித்த மனம், இருதயம் மற்றும் சித்தத்தின் உயிர்த்தெழுதலின் அதே செயல் முறையை அவர்களும் அனுபவித்துக் கொண் டிருக்கிறார்கள்)]. தேவனுடைய விசுவாச உண்மைத்துவ மானது, இந்த நோக்கத்தை அடைவதற்காக, அவருடைய நான்கு மேன்மையான குண இயல்புகளை, சபை வகுப்பாரில் உருவாக்குவதின் மூலமும், அவர்கள் அவை களை அவர்களுடைய குணாம்சங்களுக்குள் பெற்றுக் கொள்வதின் மூலமும், இது நடைபெறுகிறது [தேவ னுடைய செயல்பாடுகளின் விசுவாசத்தினாலே (தேவ னுடைய சாயலின் மேலுள்ள விசுவாசம் என்பது தவறான மொழி பெயர்ப்பாகும் - *KJV* பார்க்கவும்) - இது தேவ னுடைய செயல்பாடுகளில் அவர் வெளிப்படுத்துகிற விசுவாச உண்மைத்துவத்தைக் குறிக்கிறது]. தேவ னுடைய செயல்பாடுகளில், தேவன் வெளிப்படுத்தின, இதே விசுவாச உண்மைத்துவத்தினால், யெஷுஆவின் மரித்த நிலையிலுள்ள மனுஷீக மனம், இருதயம் மற்றும் சித்தத்திலிருந்து, கிறிஸ்துவின் புதிதான தெய்வீக மனம், இருதயம் மற்றும் சித்தத்தை, இதே விதமாக எழுப்பினார் [அவரை மரித்தோரிலிருந்து எழுப்பின தேவன் (சொல் லர்த்தமாக மரித்தவைகளிலிருந்து, அதாவது மனம்,

*இருதயம் மற்றும் சித்தம்)].*

*51.* சபை வகுப்பார் இந்த வாழ்க்கையிலே எழுப்பப்படுவதை, அதாவது அவர்களுடைய மனம், இருதயம் மற்றும் சித்தம் எழுப்பப்படுவதைக் காண்பிக்கிற மற்ற வசனங்கள் இவ்வாறாயிருக்கின்றன: எபே. 2:7; 2 கொரி. 1:9 ("எழுப்புகிற" என்று நிகழ்கால வினை வடிவத்தை – *present tense-* கவனியுங்கள்); யாக். 5:15 (இது சரீர ரீதியான நோயை அல்லாமல், பாவத்தினாலான நோயைக் குறித்துச் சொல்லப்படுகிறது).

*52.* எனவே நம்முடைய பாட வசனம் நமக்குக் கொடுக்கிற இரண்டாம் புத்திமதி இவ்வாறாயிருக்கிறது: நாம் மரித்த நிலையிலுள்ள நம்முடைய விழுந்துபோன மனுஷீக மனம், இருதயம் மற்றும் சித்தத்திலிருந்து எழுந்து புதுப்பிக்கப்பட்ட மனம், இருதயம் மற்றும் சித்தத்தை அடைய வேண்டும். இவ்வாறாக உயிர்த்தெழுதலின் செயல்முறையில் இந்த வாழ்க்கையிலேயே நடைபெறுகிற பகுதியை அனுபவிக்க வேண்டும். நிச்சயமாக இது மிகவும் தகுதியான புத்திமதியாகும். ஆகையால் நாம் அதற்கு இருதயப்பூர்வமாகப் பிரதிகிரியை செய்வதில் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருக்க வேண்டும். இதைவிட முழுமையான ஒரு புத்திமதியையும், நம்முடைய இருதயம் பற்றிக் கொண்டு நிறைவேற்றுவதற்கு அதிக அவசியமான புத்திமதியையும் கண்டுகொள்வது கடினமானதாகும். இந்த புத்திமதியைச் சரியாகப் புரிந்துகொள்ளும்போது, தேவன் செய்கிற மிகப்பெரிய வேலைகளில் ஒன்றாகிய உயிர்த்தெழுதலில் நமக்குரிய பங்கை நாம் நிறைவேற்ற இது நம்மை உற்சாகப்படுத்தும். இந்த உயிர்த்தெழுதலின் செயல்முறையின் மற்றொரு பகுதியானது மரண நிலையிலிருந்து நாம் எழுப்பப்படுவதாகும். அந்தப் பகுதியில் நாம் எவ்விதத்திலும் செயல்படப் போவதில்லை என்பது உண்மை. ஏனென்றால் அது யெஷுஆ கிறிஸ்துவின் மூலம் தேவன் ஒருவர் மட்டுமே செய்யும் வேலையாகும். ஆனால் உயிர்த்தெழுதல் செயல்முறையின் முதல் பகுதியில், அதாவது மரித்த நிலையிலுள்ள நம்முடைய விழுந்துபோன மனுஷீக மனம், இருதயம் மற்றும் சித்தத்திலிருந்து நாம் எழுப்பப்படும் போது, தேவனோடு ஒத்துழைக்கும் சிலாக்கியம் நம்முடையதாக இருக்கிறது. இந்த பகுதியிலும் கூட முக்கியமான வேலையைத் தேவன் யெஷுஆ கிறிஸ்துவின் ஊழியத்தின் மூலம் செய்கிறார்.

*53.* ஆகையால் தேவன் செய்கிற மிகப்பெரிய வேலைகளில் ஒன்றாகிய இதில் தேவனோடு ஒத்துழைப்பதில் நாம் ஜாக்கிரதையுள்ளவர்களாக இருப்போமாக. தேவனோடு நாம் ஒத்துழைப்பது என்ற எண்ணம் மிகுந்த சிலாக்கியத்தினாலும் மிகுந்த பொறுப்பினாலும் மற்றும் பயபக்தியினாலும் நிறைந்த ஒன்றாகும். ஏனென்றால் இது மரணத்திற்குள் அடக்கம் பண்ணப்பட்டு ஜீவனுக்குள் எழுந்திருப்பதை அர்த்தப்படுத்தும். இதுவே கிட்டத்தட்ட முழு கிறிஸ்துவ வாழ்க்கையாகும். ஆகையால் இதில் நமக்குரிய பங்கை ஜாக்கிரதையுடன் நிறைவேற்றி "மரித்தவைகளிலிருந்து எழுந்திரு" என்ற நம்முடைய பாட வசனத்தின் இரண்டாம் புத்திமதியை நிறைவேற்றுவோமாக.

## *"கிறிஸ்து உன்னைப் பிரகாசிப்பிப்பார்"*

*54.* நம்முடைய பாட வசனத்தின் மூன்றாம் பகுதி ஒரு புத்திமதியல்ல. மாறாக, "தூங்குகிற நீ விழித்து, மரித்தோரை (மரித்தவைகளை) விட்டு எழுந்திரு" என்ற இரு புத்திமதிகளை நிறைவேற்றுபவர்களுக்குக் கொடுக்கப்படுகிற கிருபையான வாக்குத்தத்தமாயிருக்கிறது. இவ்வாறாக இந்த பாட வசனத்திலுள்ள இரண்டு புத்திமதிகளை நிறைவேற்றுவதென்ற நிபந்தனையின் அடிப்படையில் இந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்படுகிறது. அந்த நிபந்தனைகள் நிறைவேற்றப்படாவிட்டால், வாக்குத்தத்தம் நிறைவேற்றப்படுவது அவசியமில்லை. அந்த நிபந்தனைகளைக் கடைப்பிடிக்கும் போது வாக்குத்தத்தம் உண்மையாயிருக்கும். இந்த வாக்குத்தத்தத்தைப் புரிந்துகொள்ளும் போது, அது மிகவும் கிருபையான ஒரு வாக்குத்தத்தமென்பது தெளிவாகும்.

*55.* இந்த வசனத்தில் கொடுக்கப்பட்ட வாக்குத்தத்தம் எவ்வளவு கிருபையானதென்று புரிந்துகொள்வதற்கு, இவ்வசனத்தில் வருகிற பிரகாசமென்ற (வெளிச்சம்) வார்த்தையின் அர்த்தத்தை நாம் சரியாகப் புரிந்துகொள்ள வேண்டும். வேதாகமத்தில் வெளிச்சமென்ற வார்த்தை உருவகமாக இரண்டு அர்த்தங்களில் உபயோகிக்கப்படுகிறது: *(1)* சத்தியம் - மற்ற பல வசனங்களிலும் இதை நாம் காண்கிறோம். எடுத்துக்காட்டாக, சங். *36: 9; 97: 11; 112: 4; 118: 27; 119: 105, 130;* நீதி. *4: 18;* யோவா. *3: 19 -21; 2* கொரி. *4: 4, 6; 1* பேது. *2: 9;* மற்றும் *(2)* சத்தியத்தின் ஆவி மற்றும் அதின் வெளிப்பாடுகள் - இதை நாம் பின்வரும் வசனங்களில் காண்கிறோம்: சங். *43: 3; 56: 13; 104: 2;* நீதி. *13: 9;* மத். *5: 16; 6: 23;* ரோம. *13: 12; 2* கொரி. *6: 14;* எபே. *5: 8; 1* யோவா. *1: 5.*

*56.* நம்முடைய பாட வசனத்தில் பிரகாசமென்ற வார்த்தைக்குச் சத்தியம் மற்றும் சத்தியத்தின் ஆவி என்ற இரு அர்த்தங்களும் இருக்கின்றன. ஏனென்றால் நாம் சத்தியத்திற்கும், நீதிக்கும், பரிசுத்தத்திற்கும் விழித்து, மரித்த நிலையிலுள்ள நம்முடைய விழுந்துபோன மனுஷீகத்தின் மனம், இருதயம் மற்றும் சித்தத்திலிருந்து எழுந்து, புதுப்பிக்கப்பட்ட மனம், இருதயம் மற்றும் சித்தத்தை அடையும்போது கிறிஸ்து நமக்கு இந்த இரண்டு காரியங்களையும் கொடுக்கிறார். ஏனென்றால் இந்த இரண்டு நிபந்தனைகளை நிறைவேற்றும்போது நாம் சத்தியம் மற்றும் சத்தியத்தின் ஆவியை ஏற்றுக்கொள்ளக் கூடிய மனநிலையிலிருப்போம். சத்தியத்தை ஏற்றுக் கொள்ள கூடியவர்களாயிருப்பதற்கு, பரத்துக்குரிய கலிக்கமாகிய மனத்தாழ்மை, பணிவு நயம், சத்தியம் மற்றும் நீதியின் மேல் பசித்தாகம், உண்மை, நற்குணம், போற்றித்துதிக்கும் பயபக்தி மற்றும் பரிசுத்தம் என்பவைகள் நம்மிடமிருக்க வேண்டும். இந்த ஏழு பண்புகள் நம்முடைய இருதயத்திலிருக்கும் போது, அது நம்முடைய இருதயங்களைச் சத்தியத்தின் ஆவியில் அதிகமதிகமாகப் பெருகச்செய்யும். இவ்வாறாக ஆவிக்குரிய தூக்கத்திலிருந்து விழித்து நம்முடைய புதுப்பிக்கப்பட்ட மனம், இருதயம் மற்றும் சித்தத்தில் எழுந்திருப்பதென்பது, கிறிஸ்துவின் சாயலை அடைவதற்காகச் சத்தியம் மற்றும் அதின் ஆவியைப் பெற்றுக்கொண்டு தக்கவைத்துக் கொள்வதற்கான நிபந்தனைகளாக மட்டுமல்ல, அதற்குரிய செயல்முறையாகவும் இருக்கின்றன.

*57.* நாம் இந்த நிபந்தனைகளை நிறைவேற்றுவதையும், இந்த செயல்முறையில் ஈடுபடுவதையும் கிறிஸ்து காணும்போது, நமக்குத் தகுதியானதும், நாம் ஏற்றுக் கொள்ளக் கூடியதுமான சத்தியத்தை நமக்குத் தொடர்ந்து கொடுப்பார். விசேஷமாக முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிற வெளிச்சத்தை நமக்குத் தொடர்ந்து கொடுப்பார். இந்த சத்தியத்தை நமக்குத் தெளிவாக்குவதற்கு, அவர் பயன்படுத்துவதற்கு ஆயத்தமாயிருக்கிற சத்திய ஊழியக்காரர்களை உபயோகித்து, மிக கிருபையாகவும் முழு மனதோடும் அவர் நமக்கு

இந்த வெளிச்சத்தை அளிப்பார். ஏனென்றால் தேவன் கிறிஸ்துவை நம்முடைய ஞானமாக *(1கொரி.1:31).* அதாவது நம்முடைய போதகராக ஆக்கினபோது, இந்த ஊழியத்திற்காகவே தேவன் அவரை நியமித்தார். மேலும் சத்தியத்தின் ஆவியை நம்மில் பெருகச் செய்வதின் மூலம், சத்தியத்தைப் பெற்றுக் கொள்வதற்கான நம்முடைய திறமையையும் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டிருக்கிறார். மேலும் அந்த சத்தியத்தின் மூலம் திரும்ப நம்முடைய சத்தியத்தின் ஆவியைப் பெருகச் செய்கிறார். இந்த செயல்முறை இவ்வாறாயிருக்கிறது: *(1)* அவர் சத்தியத்தின் ஒரு பகுதியை நமக்குக் கொடுப்பார், *(2)* நாம் அந்த சத்தியத்தின் தாக்கத்திற்குக் கீழ்ப்படியும் போது அது புதுப்பிக்கப்பட்ட மனம், இருதயம் மற்றும் சித்தமாகிய சத்தியத்தின் ஆவியை நம்மில் பெருகச் செய்யும், *(3)* சத்தியத்தின் ஆவி நம்மில் பெருகும் போது, மேலும் சத்தியத்தைப் பெற்றுக் கொள்வதற்கு நம்முடைய திறனை அதிகரிக்கும்படி அது நம்முடைய மனம், இருதயம் மற்றும் சித்தத்தை விரிவாக்கும். இவ்வாறாகப் பரஸ்பரமாகப் பிரதிகிரியை செய்கிற இந்த இரண்டு காரியங்களை அவர் தொடர்ந்து செயல்படுத்திக் கொண்டிருப்பார். அதாவது *(1)* நம்மிடமுள்ள சத்தியத்தைப் பெருகச் செய்வதின் மூலம் சத்தியத்தின் ஆவியை பெருகச் செய்வார், *(2)* நம்மிடமுள்ள சத்தியத்தின் ஆவியைப் பெருகச் செய்வதின் மூலம், நம்மிடமுள்ள சத்தியத்தை அதிகரிக்க செய்வதற்குத் தேவையான திறனைப் பெருகச் செய்வார். இவ்வாறாக நாம் நம்முடைய ஓட்டத்தின் முடிவைச் சென்றடையும் வரை இதைத் தொடர்ந்து செய்து கொண்டே இருப்பார். ஆனால் நாம் நம்முடைய பாட வசனத்தின் இரு புத்திமதிகளை நிறைவேற்றுவதை அவர் காணும் போது மட்டுமே அதை அவர் செய்வார்.

*58.* நாம் விழித்துக் கொண்டிருப்பதையும், விழித்திருப்பதையும், எழுந்து கொண்டிருப்பதையும் எழுந்திருப்பதையும், யாவே தேவன் மற்றும் யெஷுஆ காணும்போது, அது அவர்களுக்குப் பரிசுத்த மகிழ்ச்சியை அளிக்கும். பிரகாசம் என்ற வார்த்தையின் மேலே கொடுக்கப்பட்ட இரு அர்த்தங்களிலும், கிறிஸ்து நம்மை பிரகாசிக்கும்படி செய்வதில், தேவன் அந்த மகிழ்ச்சியை வெளிப்படுத்துகிறார். இதில் யாவே தேவன் மற்றும் கர்த்தராகிய யெஷுஆ கிறிஸ்து நிறைவேற்றும் பங்கில், அவர்கள் ஒருபோதும் உண்மைத்துவமற்றிருப்பதில்லை. நாம் நம்முடைய பாட வசனத்தில் சொல்லப்பட்ட இரு புத்திமதிகளை நிறைவேற்றிக் கொண்டிருக்கும்வரை, அவர்கள் அவர்களுடைய பங்கைத் தொடர்ந்து நிறைவேற்றிக் கொண்டிருப்பார்கள். மேலும் இந்த வெளிச் சமானது, உருவகமான தூக்கத்திற்குரிய காரியங்களைக் களைந்து போடவும், உருவகமான விழிப்புக்குரிய காரியங்களைத் தரித்துக் கொள்ளவும், நம்முடைய திறனைத் தொடர்ந்து பெருகச் செய்யும். மேலும் மரித்த நிலையிலுள்ள நம்முடைய விழுந்துபோன மனுஷீக மனம், இருதயம் மற்றும் சித்தத்திலிருந்து எழுந்து, நம்முடைய உயிர்த்தெழுதலின் செயல்முறையில் புதுப்பிக்கப்பட்ட மனம், இருதயம் மற்றும் சித்தத்தை அடைவதற்கு நம்முடைய திறனைத் தொடர்ந்து அதிகரிக்கச் செய்யும். நாம் நம்முடைய பிரதிஷ்டையின் பொருத்தனைகளுக்குத் தொடர்ந்து உண்மைத்துவமாக இருக்கும்வரை, அவர் நமக்கு இந்த ஆசீர்வாதங்களைக் கொடுத்துக் கொண்டே இருப்பார். இவைகளை எல்லாம் கருத்தில் கொள்ளும்போது, "தூங்குகிற நீ விழித்து, மரித்தவைகளை விட்டு எழுந்திரு" என்று நம்முடைய பாட வசனம் சொல்லுகிற இரு புத்திமதிகளுக்குச் செவி சாய்க்க நம்மை பெரிதும் ஊக்குவிக்கும். நாம் அவைகளுக்குச் செவி சாய்த்து, "கிறிஸ்து உன்னை பிரகாசிப்பிப்பார்" என்ற நம்முடைய பாட வசனத்தில் சொல்லப்பட்ட அருமையான ஆசீர்வாதத்தின் நன்மைகளைப் பெற்றுக் கொள்வோமாக.

*நாம் யெஷுஆவில் விழித்து,*
*யெஷுஆவோடு எழுந்திருக்கும்போது இனி*
*தூங்குவதில்லை;*
*தேவனுடைய அருமை குமாரராகிய கிறிஸ்து*
*யெஷுஆவின் மூலம்*
*நாம் அனைவரும் பெற்றுக் கொள்வதற்கு உண்மையான*
*வெளிச்சத்தைத் தேவன் அருளுவார்.*

**********

*"நீ என்னைச் சீக்கிரமாக எழுப்பிவிட்டாய், நான்*
*மறுபடியும் தூங்க வேண்டும்" என்று*
*முறுமுறுத்துத் தூங்குகிறவனின் சத்தத்தைக் கேட்டேன்.*
*கதவு கீல் மூளையில் ஆடுகிறது போல், அவன் தன்*
*படுக்கையில் ஆடிக் கொண்டிருக்கிறான்.*
*தன் உடலையும் தோளையும் மந்தமான தன் தலையையும்*
*திருப்புகிறான்.*

*"இன்னும் கொஞ்சம் தூங்கட்டும், இன்னும் கொஞ்சம்*
*உறங்கட்டும்,"*
*அவனுடைய பாதி வாழ்நாட்களையும் எண்ணற்ற*
*மணிநேரங்களையும் வீணாக்குகிறான்;*
*அவன் எழுந்து உட்காரும்போதும், தன் கைகளை*
*முடக்கிக் கொள்கிறான்.*
*நடக்கும்போது சோம்பி திரிகிறான், நிற்கும்போது*
*அசட்டை போக்குடன் நிற்கிறான்.*

*நான் அவனுடைய தோட்டத்தின் வழியாகச் செல்கையில்,*
*நெருஞ்சில்களைக் கண்டேன்,*
*முள்ளும் குருக்கும் மிக உயரமாக வளர்ந்திருந்தன.*
*அவன்மேல் கிரியை செய்கிற கிருபைக்குப் பிரதிகிரியை*
*செய்ய தவறுகிறான்;*
*அவனுடைய ஆவி சீர்கேடடைந்து, அவன் இருதயம்*
*பொல்லாப்புக்குத் திரும்புகிறது.*

*அவன் தன் மனதைச் சீர்படுத்திக் கொள்ள இன்னும்*
*முயற்சி செய்கிறான் என்ற*
*நம்பிக்கையுடன் அவன் வீட்டிற்குச் சென்றேன்;*
*அவன் தன் கனவுகளைக் குறித்தும், புசித்துக்*
*குடிப்பதைக் குறித்தும் என்னிடம் பேசினான்,*
*ஆனால் அவன் வேதாகமத்தைப் படிக்கிறதில்லை,*
*சிந்திக்கிறதை விரும்புகிறதில்லை.*

*நான் என் இருதயத்தில் இவ்வாறு சொல்லிக்*
*கொண்டேன், "இது எனக்கொரு பாடமாக இருக்கிறது,*
*வேலை செய்வதையும் படிப்பதையும் விரும்ப*
*வேண்டுமென்று எனக்குப் போதித்து,*
*என் வளர்ச்சியைக் குறித்து அக்கறை கொள்கிற*
*சகோதரர்கள் இல்லாவிட்டால்,*
*நான் எப்படிப்பட்டவனாக இருந்திருப்பேன் என்பதற்கு*
*எடுத்துக்காட்டாக இருக்கிறான்.*
*இந்த சகோதரர்களுக்காகத் தேவனுக்கு நன்றி*
*கூறுகிறேன்.*

****************************************

# நம்முடைய மா உன்னத தேவன்

***HE# 083, March 1934, pp. 9-11***

*"நீரே அநாதியாய் என்றென்றைக்கும் தேவனாயிருக்கிறீர்." (சங்.90:2)*
*"நான் யாவே, இது என் நாமம்; என் மகிமையை வேறொருவனுக்கும், என் துதியை விக்கிரகங்களுக்கும் கொடேன்" (ஏசா. 42:8)*
*"பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு, அவராலே சகலமும் உண்டாயிருக்கிறது" (1 கொரி.8:6)*
*"இஸ்ரயேலே, கேள்: நம்முடைய தேவனாகிய கர்த்தர் ஒருவரே – யாவே" (உபா. 6:4)*



*1.* இந்த வசனங்களும் மற்ற வேத வசனங்களும் ஆள்தத்துவமுடைய (ஒரு தனி நபராக இருக்கிற) தேவனைக் குறித்து நமக்குச் சொல்கின்றன. அவர் எல்லோருக்கும் பிதாவாக அல்லது ஜீவனை அளிப்பவராக இருக்கிறார். அவர் நித்தியவாசியாகிய மகத்துவமுள்ளவராயிருக்கிறார். மெய் தேவனற்ற ஜனங்களுக்கு "அநேக தேவர்களும் அநேக கர்த்தர்களும் உண்டாயிருந்தாலும், பிதாவாகிய ஒரே தேவன் நமக்குண்டு" என்றும், தேவன் மனுகுலத்தோடு செயல்படுவதற்கு நியமித்த ஒரே ஒரு வழியாகிய "யெஷுஆ கிறிஸ்து என்னும் ஒரே கர்த்தரும் நமக்குண்டு" என்றும் (1 கொரி. 8:6) "பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக யெஷுஆ கிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்" என்றும் (பிலி. 2:11) பரிசுத்த பவுல் அறிவிக்கிறார்.

*2.* "தேவனுடைய சிருஷ்டிப்பின் ஆதியைக்" குறித்து வேத வசனங்கள் நமக்குச் சொல்கின்றன. ஆகையால் அந்த சிருஷ்டிப்பு தொடங்கப்படுவதற்கு முன்பு யாவே தேவன் தனித்திருந்த ஒரு காலம் இருந்தது - "அவர் நித்தியவாசியாக இருக்கிறார்". அக்காலத்தில் மேன்மையானவராகிய மிகாயேலும் அவரோடிருந்ததில்லை. இந்த மிகாயேலே மா உன்னத மேசியாவாக இருக்கிறார். இவரைத் தேவன் மிக உயர்வாகக் கனப்படுத்தி இருக்கிறார். மேலும் என்றென்றைக்குமுள்ள மகிமையான நித்திய காலம் முழுவதும் தேவன் அவரை மேலும் கனப்படுத்துவார். சிருஷ்டிப்பு தொடங்குவதற்கு முன்பு அவர் பிதாவோடு இருந்ததில்லை. அவரே "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியாயிருக்கிறார்", சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவராயிருக்கிறார்" (வெளி. 3:14; கொலோ. 1:15). அவர் தேவனுடைய இயல்புகளின் முதலாம் வெளிப்பாடாயிருந்தார் (யோவா. 1:18).

*3.* இந்த மகத்துவமான தேவனாகிய யாவே தேவன் தம்மை மட்டுமே சார்ந்தவராகவும் (*self-centered* – புறம்பான தாக்கங்களால் பாதிக்கப்படாதவர்), தம்மில் தாமே முழுமையானவராகவும் (*self-contained*) இருக்கிறார். இவர் நேற்றும் இன்றும் என்றென்றைக்கும் நம்முடைய தேவனாயிருக்கிறார். அவர் மாறாதவர். தேவனுடைய குணாம்சத்தின் ஒவ்வொரு இயல்பும் கோடிக்கணக்கான வருடங்களுக்கு முன் எப்படி இருந்ததோ, இன்றைக்கும் அவ்வாறே இருக்கிறது. ஆனால் முற்காலத்தில் அந்த குணாம்சம் வெளிப்படாதிருந்தது. மேலும் சிருஷ்டிப்பின் ஒவ்வொரு படியும் அந்த தெய்வீக குணாம்சத்தை மென்மேலும் வெளிப்படுத்தினது. சிருஷ்டிப்பில் அடுத்தடுத்து வரும் ஒவ்வொரு படியும், அதின் அபிவிருத்தியும், நித்தியமான அவரைப் புரிந்து கொள்ளும் திறமையுடைய புதிதான சிருஷ்டிகளைக் கொண்டு வந்தது. வரவிருக்கும் காலங்கள் முழுவதிலும் யாவே தேவனுடைய சிருஷ்டிப்பின் வல்லமை தொடர்ந்து செயல்படுத்தப்படும் என்று எண்ணுவது நியாயமானதாகும்.

*4.* வானியல் ஆராய்ச்சியானது பல கோடிக் கணக்கான நட்சத்திரங்கள் இருப்பதை நிரூபித்திருக்கிறது. நம்முடைய சூரியனைச் சுற்றி வருகிற பல கோள்களின் அமைப்பு இருப்பதைப் போலவே (நம்முடைய பூமி அந்த அமைப்பின் ஒரு பகுதியாக இருக்கிறது) இந்த நட்சத்திரங்கள் ஒவ்வொன்றையும் சுற்றிவரும் கோள்களின் அமைப்புகளும் இருக்கின்றன. வேத வசனங்களிலிருந்து நாம் பின்வரும் முடிவுகளுக்கு வருவது நியாயமானதாகும்: (1) பல கோடிக்கணக்கான இந்த கோள்கள் எல்லாவற்றையும் ஒழுங்குப்படுத்தும் பெரிய வேலை நித்தியத்திற்கும் தொடரும், (2)"பூமி" என்ற கோளில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிற தெய்வீக கிருபையின் வேலை பிரபஞ்சம் முழுவதும் தொடர்ந்து நடைபெறும். நாம் இதுவரை கண்டுபிடித்திருக்கிற கோள்களின் அமைப்புகளில் மட்டுமல்ல, நமக்கு மிகவும் தூரமாக இருப்பதால், இதுவரை கண்டுபிடிக்கப்படாத கோடிக்கணக்கான கோள்களின் அமைப்புகளிலும் இந்த வேலை தொடர்ந்து நடைபெறும்.

*5.* மற்ற உலகங்கள் மற்றும் அவைகளின் குடிகள் சம்பந்தமாகத் தேவன் செயலாற்றும் முறைகள் தேவனுடைய அனந்த ஞானத்தை வெளிப்படுத்தும் என்பதில் சந்தேகமில்லை. எடுத்துக்காட்டாக வேதாகமம் பின்வரும் காரியத்தைச் சுட்டிக் காட்டுகிறது என்பதை நாங்கள் புரிந்து கொள்கிறோம்: பூமியில் தீமையை அனுமதித்தது ஞானமான ஒன்றாக இருந்தாலும், கோடிக் கணக்கான மற்ற கோள்களில் இதே விதமாக பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை ஏதேனுமொரு காரணத்திற்காக அனுமதிப்பது ஞானமானதாகவோ ஏற்றதாகவோ இருக்கும் என்பது அவசியமில்லை. அதாவது மற்ற கோள்களை ஒழுங்குப்படுத்தி, அபிவிருத்தி செய்து, மகா உன்னத சிருஷ்டிகரின் துதிகளை அறிவிக்கும் மகிமையான சிருஷ்டிகளால் அவைகளை நிரப்புவதற்கு, பூமியில் மனுகுலம் சம்பந்தமாக அனுமதிக்கப்பட்ட பாவம் மற்றும் மரணத்தின் அனுபவங்களை அவர்களும் அனுபவிக்க வேண்டுமென்பது அவசியமில்லை.

*6.* இவ்வாறாகக் கருதும் போது பூமியில் தீமை அனுமதிக்கப்படுவதற்கான பெரிதான காரணத்தை நாம் காண்கிறோம் அல்லவா? அதாவது 6000 வருடங்களாக சிருஷ்டிகருக்கு அவமதிப்பை உண்டு பண்ணுவதாகத் தோன்ற செய்ததும், மனுகுலத்தைச் சீர்கேடடையச்

*செய்ததும், தேவ தூதர்களை ஆச்சரியப்படச் செய்ததும், மனுகுலத்தைத் தவித்துக் கொண்டிருக்கிற சிருஷ்டியாக ஆக்கினதுமான பாவம் மற்றும் மரணத்தின் ஆட்சி அனுமதிக்கப்படுவதற்கான பெரிய காரணத்தைக் காண்கிறோம் அல்லவா? மேசியாவின் ராஜ்யமானது, இந்த குழப்பத்திலிருந்து நிச்சயமாக ஒழுங்கை கொண்டு வரும் என்று நாம் புரிந்து கொள்ளும்போது மட்டுமே, தேவனுடைய மகத்துவத்தைப் பற்றிய சரியான கருத்தைப் பெற்றுக் கொண்டு, அந்த மகத்துவத்தை ஓரளவிற்காவது உணரத் தொடங்குவோம்.*

*7. மனுகுலம் சம்பந்தமாகத் தெய்வீக நோக்கங்கள் நிறைவடைந்த சூழ்நிலைகளின் கண்ணோட்டத்திலிருந்து, அந்த கண்ணோட்டத்திலிருந்து மட்டுமே காணும்போது, நாம் தெய்வீக ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை என்ற பண்புகளைப் புரிந்துகொள்ளக் கூடும். நமக்குக் கொடுக்கப்பட்டிருந்த முதல் பாடம் தேவநீதி என்பதாகும் – அதாவது பாவம் என்பது பாடுகளையும், இறுதியாக மரணத்தையும் கொண்டுவரும் என்பதாகும். இரண்டாம் பாடமானது தெய்வீக அனுதாபம் மற்றும் ஒத்துணர்வாகிய அன்பைப் பற்றின பாடமாக இருந்தது. மீட்பரை அனுப்புவதிலும், பின்பு அவருக்கு வெகுமதியாக அவரை உயர்த்துவதிலும், அவருடைய மகிமையிலும், மீட்டுக் கொள்ளப்பட்ட மனுகுலத்தை ஆசீர்வதிப்பதிலும் அவருடைய கூட்டாளிகளாக இருக்கும்படி “தெரிந்து கொள்ளப்பட்ட” சபையைச் சேர்ப்பதிலும் தெய்வீக அன்பைப் பற்றின பாடம் வெளிப்படுத்தப்பட்டது.*

*8. விரைவில் தொடங்கி வைக்கப்படப் போகிற மகிமையின் ஆட்சியாகிய மேசியாவின் ஆட்சியானது, பரிதாபமான மனுகுலத்தைப் பாவத்திலிருந்தும், துயரத்திலிருந்தும், சீர்கேட்டிலிருந்தும் தூக்கி நிறுத்தும். மேலும் மனுஷீக பூரணத்துவத்திற்கும், தெய்வீகத் தயவிற்கும், நித்திய ஜீவனுக்கும் திரும்ப வருவதற்கான முழுமையான சந்தர்ப்பத்தை ஒவ்வொருவனுக்கும் அளிக்கும். மனுகுலத்திற்கு இழந்ததைத் திரும்பக் கொடுத்தலை அளிப்பதற்காக, அவர்கள் மரணமென்னும் நித்திரையிலிருந்து எழுப்பப்படுவார்கள். இந்த இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் வேலையானது தெய்வீக வல்லமையின் மகத்துவத்தைப் பற்றின பெரிய பாடமாகும். இந்த தெய்வீக வல்லமையானது, தேவனுக்கு ஒப்பானவரும் ஜீவாதிபதியும், மகிமையின் கர்த்தரும், மீட்பரும், ஆதாமுக்கும் அவருடைய மரண தண்டனையில் பங்கு கொண்ட அவருடைய சந்ததியாராகிய முழு மனுகுலத்திற்கும் மறுபடியும் ஜீவன் அளிப்பவருமான மேசியாவின் மூலம் செயல்படுத்தப்படும்.*

*9. இறுதியாக மனுஷர் சம்பந்தமாகவும் மேசியா சம்பந்தமாகவும் யாவே தேவன் கொண்டிருக்கிற மேன்மையான நோக்கங்கள் மற்றும் செயல்பாடுகள் நிறைவடைந்து, அந்த கண்ணோட்டத்திலிருந்து பார்க்கும் போது, தேவனுடைய முன்னறிவும் ஞானமும் வெளியரங்கமாக்கப்படும். அந்தத்திலுள்ளவைகளை ஆதி முதற்கொண்டு அறிந்தவராகவும், பாவம் மற்றும் மரணத்தின் ஆளுகையை அனுமதிப்பதென்பது எவ்வாறு இறுதியாக அவருக்கு மகிமையையும், மனுஷீகத் தளத்திலும் ஆவிக்குரிய தளத்திலுமுள்ள அவருடைய சிருஷ்டிகளுக்கு ஆசீர்வாதத்தையும் போதனையையும் உண்டுபண்ணும் என்றும் முன்னறிந்திருந்தார் என்று நாம் புரிந்து கொள்ளும்போது தேவனுடைய ஞானம் வெளியரங்கமாக்கப்படும்.*

*10. அப்போது தங்களுடைய சிருஷ்டிகரின் மகிமையான குணாம்சமும், அவர் முழுமையான நீதியையும் பூரணத்துவத்தையும் கோருவது ஏன் அவசியமென்பதும் எல்லோருக்கும் வெளிப்படுத்தப்படும். நிச்சயமாக, அதின் இறுதியான விளைவு வேதாகமத்தில் அறிவிக்கப்பட்டதற்கு ஒத்ததாக இருக்கும்: எல்லோரும் நீதியைக் கற்றுக் கொண்டு அக்கிரமத்தை வெறுப்பார்கள். வானத்திலும் பூமியிலும் பூமியின் கீழும் இருக்கிற சிருஷ்டிகள் யாவும் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவரான யாவே தேவனையும், ஆட்டுக்குட்டியானவரையும் சதாகாலங்களிலும் போற்றித்துதிப்பார்கள் (வெளி. 5:13,14).*

*11. நம்மைச் சுற்றியுள்ள கோடிக்கணக்கான உலகங்கள் சம்பந்தமாகத் தேவன் கொண்டிருக்கிற வருங்கால நோக்கங்களைக் குறித்து வேதாகமத்தில் கொடுக்கப்பட்ட சில குறிப்புகளிலிருந்து நாம் பின்வரும் கருத்தைப் பெற்றுக் கொள்ளக்கூடும்: பூமியில் தேவனுடைய திட்டத்தின் ஆரம்பக் கால அபிவிருத்தி சம்பந்தமாக யாவே தேவனால் போதிக்கப்பட்டு உபயோகிக்கப்பட்டவர்கள், அதன் மூலம் மற்ற உலகங்களில் தெய்வீகச் செயலியக்கிகளாக இருப்பதற்குத் தகுதிப்படுத்தப்பட்டு ஆயத்தப்படுத்தப்படுகிறார்கள்.*

*12. மகா மீட்பரும், அவருடைய “தெரிந்து கொள்ளப்பட்ட” கூட்டாளிகளும் மனுகுலத்தைப் பாவம் மற்றும் மரணத்தின் சூழ்நிலைகளிலிருந்து தூக்கி நிறுத்தின பிறகு, மற்ற உலகங்களில் ஊழியம் செய்யவும், “அவர்களை அந்தகாரத்தினின்று தம்முடைய ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு வரவழைத்தவரின் புண்ணியங்களை அறிவிக்கவும்” நிச்சயமாகத் தகுதியுள்ளவர்களாக இருப்பார்கள். தேவனுடைய சுதந்தரவாளிகளாகப் (எபி. 1:1-3,* ரோம. *8: 16,17), பிரபஞ்சமே அவர்களுடைய சுதந்திரமாக இருக்கும் என்றும், அவர்களுடைய ராஜ்யத்தின் பெருக்கத்திற்கு முடிவில்லை என்றும் (ஏசா. 9:7) நாம் விசேஷமாக நினைவுகூரும் போது, அவர்களுக்கு இவ்வித அலுவல் அளிக்கப்படும் என்று கருதுவது நியாயமானதாகும்.*

*13. சுவிசேஷ யுகத்தின் முடிவில் ஆவி ஜீவிகளாகப் பூரணப்படுத்தப்படும் திரள் கூட்டத்தாரைக் குறித்தும், மேசியாவின் மாட்சிமையான ஆட்சியின் முடிவில் ஆவி ஜீவிகளாக இருக்கப்போகிற மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களைக் குறித்தும் நாம் என்ன சொல்லக்கூடும்? அவர்கள் நீதியுள்ளவர்களாக இருப்பதை வெளிப்படுத்துவது மட்டுமல்ல, வீழ்ச்சி மற்றும் அதினால் வந்த பாவம் மற்றும் மரணத்தின் ஆட்சியைக் குறித்தும், தேவனுடைய அன்பினால் நிறைவேற்றப்பட்ட மீட்பைக் குறித்தும், மேன்மையான இழந்ததைத் திரும்பக் கொடுத்தலைக் குறித்தும், இவைகளிலிருந்து கற்றுக் கொண்ட பாடங்களைக் குறித்தும், மற்ற ஜீவிகளுக்குச் சொல்ல அவர்களும் நன்றாக ஆயத்தமுள்ளவர்களாக இருப்பார்கள் அல்லவா?*

*14. நாம் சற்று முன் கருதிய தெய்வீகக் குணாம்சத்தின் பண்புகளாகிய ஞானம், நீதி, அன்பு மற்றும் வல்லமை என்பவைகள், சிருஷ்டிப்பின் வேலை தொடங்குவதற்கு முன்பே அநாதி காலங்களில் நம்முடைய சிருஷ்டிகருக்குரிய பண்புகளாக இருந்தன. ஆனால் அக்காலத்தில் தேவனை மதித்துணரக்கூடிய ஒருவரும் இருந்ததில்லை. எந்த ஒருவனுக்கும், தேவனுடைய மகிமையைச் சரியாகத் தெரிவிப்பதற்கு, நிறைவாக்கப்பட்ட யுகங்களைப் பற்றிய தேவ ஏற்பாட்டின் முழுமையான புரிந்து கொள்ளுதல் அவசியமானதாகும். நாம் இதுவரை பார்த்ததைப் போல், கர்த்தருடைய ரகசியங்களையும், அவருடைய குணாம்சத்தின் மகிமைகளையும்*

அவருடைய பரிசுத்த ஆவியினால் பிரகாசிப்பிக்கப்பட்ட அவருடைய பிள்ளைகள் மட்டுமே அறிந்திருக்கிறார்கள். ஆனால் "சமுத்திரம் ஜலத்தினால் நிறைந்திருக்கிறது போல், பூமி கர்த்தருடைய மகிமையை அறிகிற அறிவினால் நிறைந்திருக்கும்" காலம் சமீபமாயிருக்கிறது. அப்போது அவரும் அவருடைய மகிமையான அரசாங்கமும் சகல ஜாதிகளாலும் விரும்பப்பட்டதாயிருக்கும் *(ஆகா. 2:7). "கர்த்தரின் மகிமை வெளியரங்கமாகும், மாம்சமான யாவும் அதை ஏகமாய்க் காணும்" (ஏசா. 40:5).* இந்த எதிர்பார்ப்பு என்னே புத்துணர்ச்சி அளிக்கிறதாக இருக்கிறது.

*15.* இப்போது நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறதாக, நாம் காண்கிற தெய்வீகத் திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும், உலகத் தோற்றத்திற்கு முன்பே, யாவே தேவன் அறிந்திருந்தார் என்று நமக்குப் பரிசுத்த பவுல் உறுதியளிக்கிறார். தேவன் உலகத் தோற்றத்திற்கு முன்பே ஆதி காலம் முதல் இந்த காரியங்களைத் தமக்குள் தீர்மானித்திருந்தார் என்று அப்போஸ்தலர் அறிவிக்கிறார். பல ஆயிர வருடங்களாகச் செயல்பட்டுக் கொண்டு வருகிற சிருஷ்டிப்பின் செயல்முறைகளெல்லாம், அந்த சிருஷ்டிப்பின் வேலை தொடங்குவதற்கு முன்பே யாவே தேவனுடைய மனதில் கவனத்துடன் விரிவாக உருவாக்கப்பட்டிருந்தன என்பதில் சந்தேகமில்லை. தேவனுடைய இந்த தீர்மானத்தில் தேவ தூதர்களின் சிருஷ்டிப்பும் இருந்தது. தேவ தூதர்களில் எத்தனை நிலைகள் இருக்கின்றனவென்று நாம் நிச்சயமாக அறிந்து கொள்ளக் கூடாதிருந்தாலும், "தேவ தூதர்களும், அதிகாரங்களும், வல்லமைகளும், சிங்காசனங்களும், கர்த்தத்துவங்களும்" என்று வேதாகமத்தில் பல்வேறு பெயர்களால் அழைக்கப்படுகிற தூதர்கள் இருக்கிறார்கள். அதற்குப்பிறகு மனிதனுடைய சிருஷ்டிப்பு வந்தது. அவன் "தேவ தூதரிலும் சற்று சிறியவனாக" ஆக்கப்பட்டிருந்தான். மேலும் மகிமையான சிருஷ்டிகரின் சாயலிலும் ரூபத்திலும் பூமிக்குரிய கனம், மேன்மை மற்றும் வல்லமையினால் முடிச்சூட்டப்பட்டிருந்தான்.

*16.* இந்த பல்வேறு சிருஷ்டிகளுக்கிடையிலுள்ள வித்தியாசமானது அவைகளின் பூரணத்துவம் மற்றும் அபூரணத்துவத்தின் அளவுகளுக்கிடையிலுள்ள வேறுபாடு அல்ல. ஒவ்வொரு சிருஷ்டியும் அதற்குரிய தளத்தில் பூரணமாயிருந்தது. அறிவாற்றலுள்ள ஒவ்வொரு சிருஷ்டியும் ஒழுக்க ரீதியான சுயாதீனத்தோடு இயங்கும் ஜீவியாக இருந்தது. ஆகையால் தேவ தூதர்களின் தளத்திலிருந்தாலும், மனுஷீக தளத்திலிருந்தாலும் ஒவ்வொரு சிருஷ்டியும் தேவனுடைய ரூபத்தில் சிருஷ்டிக்கப்பட்டிருந்தது. அவைகளுடைய திறமைகளும் திறன்களும் வெவ்வேறாக இருந்தாலும் ஒவ்வொரு சிருஷ்டியும் எவ்வித கறையுமில்லாமல் பூரணமாக இருந்தது. எல்லையற்ற ஞானமும் நீதியும் அன்பும் வல்லமையுமுடைய சர்வ வல்லவரான யாவே தேவன், தம்முடைய சிருஷ்டிகளுக்கு ஜீவனையும் சந்தோஷத்தையும் அளிக்க விரும்புகிற ஒரு மேன்மையான பிதாவைப் போல், தம்முடைய எல்லையற்ற வல்லமைகளைச் சீராக செயல்படுத்தத் தீர்மானித்தார்.

*17.* அறிவாற்றலுள்ள இந்த ஜீவிகள் தங்களுடைய சிருஷ்டிகரும் பிதாவுமான அவரிடத்தில் பூரண உண்மைத்துவத்தை வெளிப்படுத்துவதென்ற மனநிலையைக் காத்துக்கொள்ளும்வரை, அவர்கள் எல்லோரும் தேவனுடைய பிள்ளைகளென்று அழைக்கப்பட்டார்கள். இவ்வாறாகச், சிருஷ்டிக்கப்படவிருக்கிற கோடிக்கணக்கான ஜீவிகளுக்கு மகிழ்ச்சியை அளிப்பது தேவனுடைய நோக்கமாக இருந்தது மட்டுமல்ல, நித்தியத்திற்கும் அந்த சிருஷ்டிகள் அவரில் களிகூரும் படிக்கும், அவர் அவர்களில் களிகூரும் படிக்கும், அவருடைய மகத்துவத்தையும், அவருடைய நற்குணத்தின் பூரணத்துவத்தையும் அவருடைய சிருஷ்டிகளுக்கு வெளிப்படுத்துவதும் தேவனுடைய சித்தமாயிருந்தது.

*18.* சிருஷ்டிப்பு தொடங்குவதற்கு முன்பிருந்த நித்திய காலத்தில் சர்வ வல்லமையுள்ள தேவன் தனிமையை உணர்ந்தார் என்று நாம் இதை புரிந்து கொள்ளக் கூடாது. இதற்கெதிர்மாறாக மனுஷர் உணரும் தனிமைக்கு மனுஷருடைய குறைபாடுகளே பெரிய காரணமாக இருக்கின்றன. நமக்குள் குறைவாயிருக்கிற காரியத்தை நாம் மற்றவர்களில் தேடுகிறோம். ஆனால் மா உன்னத யாவே தேவன் எவ்வித குறைபாடும் இல்லாதவராயிருக்கிறார். அவர் தம்மில் தாமே பூரணராயிருக்கிறார். அவருடைய மகிழ்ச்சியை நிறைவாக்குவதற்கு அல்லது பூரணமாக்குவதற்கு அவருக்குத் தோழமை அவசியமான ஒன்றல்ல. அவருடைய சிருஷ்டிகள் அவைகளுக்குள் வைக்கப்பட்ட அவருடைய தெய்வீக பண்புகளை முழுமையாகப் பிரதிபலிப்பதின் மூலம் அவைகள் மகிழ்ச்சியாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்திற்காக அவைகளைச் சிருஷ்டிப்பது அவருக்குப் பிரியமாயிருந்தது.

*19.* பாவத்தினால் உண்டாகும் மனுகுலத்தின் அழிவை அவர் முன்பே நன்றாக அறிந்திருந்தார். ஆனால் மனுஷரின் நம்பிக்கைகளின் இந்த அழிவானது தெய்வீக நோக்கத்தை தோல்வியுறச் செய்யவில்லை, தோல்வியுறச் செய்யும் அபாயமும் இல்லை. அது தெய்வீக குணாம்சத்தின் நேர்த்தியான குணநலன்களைத் தேவ தூதர்களுக்கும் மனுஷருக்கும் வெளிப்படுத்த மட்டுமே செய்தது. மேலும் அறிவாற்றலுள்ள தேவனுடைய சிருஷ்டிகளெல்லாம் மதித்துணர்ந்து பின்பற்றுவதற்குத் தகுதியுள்ளவைகளான தேவனுடைய பண்புகளை இன்னும் முழுமையாக எல்லோருக்கும் வெளிப்படுத்தினது.

*20.* தம்முடைய மா உன்னத ஆள்தத்துவத்தை நமக்கு வெளிப்படுத்தவும், தமது சித்தத்தின் ஆலோசனைக்குத் தக்கதாக தாம் எவ்வாறு எல்லாவற்றையும் நடப்பிக்கிறாரென்பதைத் தம்முடைய சிருஷ்டிகளுக்குக் காண்பிக்கவும் தேவன் விரும்பினதால், வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தில் அவர் அதை உருவகமாகச் சித்தரித்தார். அந்த தரிசனத்தில், நித்திய வாசியான அவருடைய சிங்காசனம், தெய்வீக வல்லமை மற்றும் முழு பிரபஞ்சத்தின் அதிகாரத்திற்குரிய இருப்பிடமாக உருவகமாகச் சித்தரிக்கப்படுகிறது. தேவ தூதர்கள் பணிவிடை செய்யும் ஆவிகளாகச் சித்தரிக்கப்படுகிறார்கள். அதற்குப் பிறகு யாவே தேவனுடைய வலது கரத்திலுள்ள புஸ்தகம் விவரிக்கப்படுகிறது. அவருடைய வலது கரத்திலிருப்பது என்பது, அது தெய்வீக வல்லமை மற்றும் பாதுகாப்பின் கீழ் இருப்பதை அர்த்தப்படுத்தும். உள்ளும் புறமும் எழுதப்பட்டிருந்த அந்த புத்தகம் "ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்தது. இது, அந்த புஸ்தகத்தில் எழுதப்பட்டிருந்த தெய்வீக நோக்கங்கள் முற்றிலும் ரகசியமாக வைக்கப்பட்டதை அர்த்தப்படுத்தும்.

*21.* அது உலகத்தோற்றத்திற்கு முன்பிலிருந்தே மா உன்னத நித்தியவாசியானவரின் கரத்தில் (அவருடைய வல்லமையில்) இருக்கிறது. அவர் அதைக் குறித்துச் சில குறிப்புகளைக் கொடுத்து, அதை நியாயப்பிரமாணத்தில் அடையாளப்படுத்தப் படும்படிக்கும், தீர்க்கதரிசிகளின்

மூலம் ஓரளவிற்கு விவரிக்கப் படும்படிக்கும் செய்தார். இருந்தாலும் அது அப்போதும் மறைக்கப்பட்ட ஒரு ரகசியமாகவே இருந்தது. அந்த தீர்க்கதரிசிகள் தாங்கள் எழுதின காரியங்களைப் புரிந்துகொள்ளாதவர்களாக இருந்தார்கள். பிதாவின் *"குறித்த காலம்"* வரும் வரை எந்த ஒருவனும் அவைகளைப் புரிந்துகொள்ளக் கூடாத தாயிருந்தது *(1பேது.1:10-12)*.

*22.* தெய்வீகத் திட்டமானது இவ்வாறு முத்திரை யிடப்பட்டு, ரகசியமாகப் பாதுகாக்கப்பட்டிருந்தாலும், உலகம் உண்டாவதற்கு முன்னே, யாவே தேவன் தீர்மானித்திருந்த இந்த நோக்கங்களை நிறைவேற்று வதற்கு, அவரால் கனப்படுத்தப்பட்ட செயலியக்கியாக இருக்க தகுதியை நிரூபிக்கிற ஒருவருக்கு மட்டுமே, அது கொடுக்கப்பட வேண்டும் என்பது, தெய்வீகத் தீர்மான மாக இருந்தது. யாவே தேவனுடைய செயலியக் கியாகவும், அவருடைய பிரதிநிதியாகவும் இருந்து தெய் வீக நோக்கங்களை நிறைவேற்றும் கனமானது, இஸ்ர யேலின் மகா மேசியாவாகவும், மேன்மையான விடுதலை யாளராகவும், தீர்க்கதரிசியாகவும், ஆசாரியராகவும், நியாயாதிபதியாகவும், ராஜாவாகவும் இருக்கும் தகுதியை நிரூபிப்பவருக்கு மட்டுமே இந்த திட்டம் முன்பே வெளிப்படுத்தப்படும்.

## ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கிறார்

*23.* நம்முடைய மீட்பர் மனுஷனை மீட்டுக் கொள்வதற்காக உலகத்திற்கு வருவதற்கு முன், பரலோக சேனைகளின் மத்தியில், தேவன் மற்றும் தேவ தூதர்களின் ஐக்கியத்தைப் பெற்றுக் கொண்டு, மிக உயர்ந்த நிலையிலிருந்தார். இருந்தாலும் தெய்வீகத் திட்டத்தின் ரகசியங்கள் எல்லாவற்றையும் அறிந்து கொள்ளும் சிலாக் கியம் அவருக்கு அளிக்கப்படாதிருந்தது. அப்போது அவருக்கிருந்த உயர்வான நிலையினாலும், அவருடைய பூரணத்துவத்தினாலும், அவருடைய கீழ்ப்படிதலினாலும், மனுஷனுடைய மீட்பராக இருக்கும் சிலாக்கியம் முதலில் அவருக்கு அளிக்கப்பட்டிருந்தது. அதற்காக அவர் மிகவும் தாழ்த்தப்பட்டு, அவமானத்தைச் சகித்து மரிக்க வேண்டியதாயிருந்தது. அதற்குப்பிறகு, இந்த மீட்பின் வேலையில் அவர் விசுவாச உண்மைத்துவமுள்ளவராக இருந்தால், அவர் மகிமைப்படுத்தப்பட்டு, தெய்வீகத் தன்மைக்கு உயர்த்தப்பட்டு, தெய்வீகத் திட்டத்தின் முடிவு பரியந்தம் அதை நிறைவேற்றுவார். முழு மனுகுலத் தையும் ஆசீர்வதிப்பதற்காகத் தேவன் ஏற்பாடு செய்த திட்டத்தின் நுணுக்கமான அறிவை பெற்றுக் கொள்ள கூடியவராயிருப்பதற்கு, கர்த்தராகிய யெஷுஆவும் கூட பிதாவினிடத்தில் அவருடைய உண்மைத்துவத்தையும் அர்ப்பணிப்பையும் முதலில் வெளிப்படுத்த வேண்டிய தாயிருந்தது.

*24.* இவைகளெல்லாம், வெளிப்படுத்தின விசேஷ புத்தகம் 5-ம் அதிகாரத்தில் விவரிக்கப் பட்டிருக்கின்றன. புத்தகத்தை வாங்கிக் கொண்டு, அதின் முத்திரைகளை உடைத்து, தேவனுடைய அற்புதமான திட்டத்தை நிறைவேற்ற பாத்திரவான் யார்? என்று சத்தமிட்டுக் கூறப்பட்டது. முதலில் ஒருவனும் பாத்திர வானாகக் காணப்படவில்லை. இறுதியாக, மேன்மையான ஒருவர் தாம் பாத்திரமுள்ளவர் என்பதை நிரூபித்தார். அவர் மகிமையான வாசஸ்தலத்தை விட்டு வந்தார். அவர் தம்மைத் தாமே தாழ்த்தி "மாம்சமானார்". அதற்கும் மேலாக, மனுஷ ரூபமாய் காணப்பட்டு, மரண பரியந்தம் அதாவது சிலுவையின் மரண பரியந்தமும் பிதாவின் சித்தத்தை நிறைவேற்றுவதற்குத் தமக்குரிய சகலத் தையும் பிரதிஷ்டை செய்தார். ஆதலால் *"தேவன் எல்லாவற்றிற்கும் மேலாக அவரை உயர்த்தி"*, மற்ற அனைவருக்கும் மேலான ஒரு நிலையை ஒரு பதவியை, ஒரு நாமத்தை அவருக்குக் கொடுத்தார் என்று அப்போஸ்தலர் சொல்கிறார் *(பிலி. 2:7-9)*. தெய்வீக நோக்கங்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றும் பொறுப் பைத் தேவன் அவருக்குக் கொடுத்தார். புத்தக சுருள் அவருக்கு ஒப்படைக்கப்பட்டது. அதின் முத்திரைகளை உடைக்கவும், அதிலுள்ள செய்தியைப் புரிந்து கொள்ள வும் அவருக்குச் சிலாக்கியம் அளிக்கப்பட்டது.

*25.* இந்த உருவகமான காட்சியில் யூதா கோத் திரத்து சிங்கம் ஜெயங் கொண்டிருக்கிறார் என்று அறிவிக்கப்பட்ட அதே நேரத்தில், யோவான் அடிக்கப் பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டியைக் கண்டார். யெஷுஆ தம்மைப் பாத்திரராக நிரூபித் திருந்தார். ஆகையால் தெய்வீகத் திட்டத்தின் காரியங் களை புரிந்து கொள்ளும் சிலாக்கியமும், அவைகளை நிறைவேற்றும் சிலாக்கியமும் நியாயமாக அவருக் குரிய தாக இருந்தது. அடிக்கப்பட்ட வண்ணமாக இருந்த அந்த ஆட்டுக்குட்டியானது, கர்த்தராகிய யெஷுஆ முப்பது வயதுள்ளவராகப் பிரதிஷ்டை செய்த நாள் முதல் அவர் செய்த ஊழியத்தில் அவரை அடையாளப் படுத்தினது. அங்கே அவர் சுயத்திற்கும் உலகத்திற்கும் மரித்தார். அவர் இந்த மேன்மையான ஒப்பந்தத்தை வெற்றிகரமாக நிறைவேற்றின பிறகு கல்வாரியில் "முடிந்தது" என்று சத்தமிட்டுச் சொன்னார்.

*26.* ஜெயங் கொண்ட இந்த மகிமை பொருந் தினவர், அப்போது *"அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி யானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தை யும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத் திரத்தையும் பெறுக்கொள்ளப் பாத்திரராயிருக் கிறார்" (வெளி.5:12)* என்று தேவனாலும் பரிசுத்த தூதர்களாலும் அங்கீகரிக்கப்பட்டார். அதாவது தெய் வீகத் திட்டத்தின் ஒவ்வொரு அம்சத்தையும் நிறை வேற்றும் பொறுப்பைப் பிதா அவருக்கு ஒப்புக் கொடுப் பார். அப்போது அவருக்கு ஒப்படைக்கப்பட்ட மேன்மை யான வேலையை அவர் இன்னும் முழுமையாகச் செய்து முடிக்கவில்லை. அவர் மரண பரியந்தமும் அவருடைய உண்மைத்துவத்தை நிரூபித்து முடித்த பிறகு, பிதா அவரை மகிமைப்படுத்தி தமது வலது பாரிசத்தில், அதாவது தெய்வீகத் தயவின் பிரதானமான நிலையில் அவரை ஏற்படுத்தினார். அப்போது அவர் அவருடைய மேன்மையான வேலையைத் தொடங்க மட்டுமே செய்தார்.

*27.* *"மணவாட்டியும், ஆட்டுக்குட்டியானவரின் மனைவியுமாகிய"* சபையை ஆசீர்வதிப்பது இந்த மகிமையான திட்டத்தின் முதல் படியாயிருந்தது. அது நிறைவடைந்திருக்கிறது. அதைத் தொடர்ந்து பூமியின் சகல ஜாதிகளின் ஆசீர்வாதம் வரவிருக்கிறது. அப்போது ஜீவித்துக் கொண்டிருப்பவர்கள் மட்டுமல்ல, மரித் தோரும் இந்த ஆசீர்வாதத்தில் பங்கு கொள்வார்கள். அவருடைய மணவாட்டியாக இருக்கச் சுவிசேஷ யுகத் தில் அழைக்கப்பட்டவர்களுக்கு அவர் அறிவிக்கிறதாவது *"நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காச னத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங் கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்கா சனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்*

செய்வேன்" (வெளி. 3:21).

28. "ஒரே தேவன் நமக்குண்டு" என்று அப்போஸ்தலர் சொல்கிறார். சர்வ ஞானமும் வல்லமையும் அவருடையவைகளாக இருக்கின்றன. சமீப காலத்தின் ஏராளமான கண்டுபிடிப்புகளெல்லாம் அவருடைய மகத்துவத்தைப் புரிந்து கொள்ள நமக்குப் பெரிதும் உதவுகின்றன. தொலைப்பேசி மற்றும் வானொலி முதலியவைகளைக் கொண்டு, மனிதன் ஓரளவிற்குச் செய்யக் கூடிய காரியங்களெல்லாம், அநாதியாய் என்றென்றைக்கும் ஜீவிக்கிற நித்தியவாசியாகிய தேவனிடமிருக்கிற எல்லையற்ற சாதனங்களைக் குறித்து நமக்கு ஒரு சிறிய குறிப்பாக மட்டுமே இருக்கின்றன. ஆனால் தெய்வீக நீதி மற்றும் அன்பை அறிந்து கொள்ளும் போது, அது நம்முடைய இருதயங்களுக்குத் திருப்தி அளிக்கிறது – இதை அறிந்துக்கொள்ளும் போது தான் நம்முடைய சிருஷ்டிகர் நம்முடைய பிதாவாக ஆகிறார்.

*******************************************

# தாவீதின் வேரும் சந்ததியும்

*BSQB pp. 298-300*

வெளி. 22:16-ம் வசனத்தில் யெஷுஆ தம்மை "தாவீதின் வேரும் சந்ததியும்" என்று அழைத்துக் கொள்கிறார். இந்த சொற்றொடரின் அர்த்தமென்ன?

1. இந்த சொற்றொடரின் அர்த்தமானது, யெஷுஆ தாவீதின் ஆண்டவரும் தாவீதின் குமாரருமாயிருக்கிறார் என்பதற்கு ஒத்ததாயிருக்கிறது. யெஷுஆவின் மனுஷீகம் பொருத்தவரை அவருடைய தாயின் வழியாக அவர் தாவீதின் கிளையாக அல்லது சந்ததியாக இருந்தார் (அப். 2:30; ரோம. 1:5; 2 தீமோ. 2:8). மாசில்லாத அவருடைய மனுஷீக ஜீவனைப் பலி செய்து, உயிர்த்தெழுந்ததின் மூலம் அவர் தாவீதின் "வேராகவும்" (வெளி. 5:5) தாவீதின் ஆண்டவராகவும் ஆனார். ஆனால் வேர் என்ற வார்த்தையின் மூலம் குறிப்பிடப்படுகிற கருத்தானது "ஆண்டவர்" என்ற வார்த்தையின் மூலம் குறிப்பிடப்படுகிற கருத்துக்கு சற்று வித்தியாசமாக இருக்கிறது. "வேர்" என்ற வார்த்தை ஜீவனின் ஊற்றையும், அந்த ஜீவனை நீடிக்கச் செய்து அபிவிருத்தி செய்யும் ஊற்றையும் அர்த்தப்படுத்தும். ஆனால் "ஆண்டவர்" என்ற வார்த்தையானது ஆளுபவர், எஜமானர், உரிமைக்காரர் மற்றும் அதிபதி என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.

2. ஏசா. 11:1-ம் வசனத்தில் நாம் இவ்வாறு வாசிக்கிறோம்: "ஈசாய்யென்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர் தோன்றி, அவன் வேர்களிலிருந்து ஒரு கிளை எழும்பிச் செழிக்கும்." கி.மு. 607-ம் வருடத்தில், சாலொமோனின் வம்ச வழியில் வந்த சிதேக்கியாவிடமிருந்து ராஜ்யபாரம் கவிழ்க்கப்பட்டு, தாவீதின் ஏகாதிபத்தியம் என்னும் பெருமையுள்ள கேதுரு உலர்ந்து விழுந்துபோன (எசே. 17:10, 12, 22-24; 19:10-14) பல நூற்றாண்டுகளுக்குப் பிறகு, பாழாக்கப்பட்ட நிலையிலுள்ள ஈசாய் என்னும் அடிமரத்திலிருந்து ஒரு துளிர், ஒரு "கிளை" எழும்பும்படி தேவன் செய்தார். அது வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கக் கடுமையாக முயற்சி செய்கிற ஒரு இளங்கிளைக்கொப்பாக இருந்தது (ஏசா. 53:2). தாவீது பல நேரங்களில் "ஈசாயின்" குமாரனென்று அழைக்கப்படுகிறார். இங்கே யெஷுஆவும் அவ்வாறே அழைக்கப்படுகிறார். ஏனென்றால் யெஷுஆ தாவீதின் குமாரராக இருப்பது மட்டுமல்ல, தாவீதாகவும் இருந்தார் (ஓசி. 3:5). தாவீது என்ற பெயர் பிரியமானவன் என்ற அர்த்தமுடையதாக இருக்கிறது. கர்த்தராகிய யெஷுஆ எல்லோருக்கும் மேலாக யாவே தேவனுக்கு மிகப் பிரியமானவராக இருந்தார்.

3. ஈசாய் என்பவர் பலரால் அறியப்படாதவராக வாழ்ந்து மரித்தார். அவருடைய குடும்பம் அதிக முக்கியத்துவமில்லாத ஒன்றாக இருந்தது (1சாமு. 18:18). ஆகையால் தாவீதை தூஷித்து நிந்திக்கும் விதத்தில் அவர் சில நேரங்களில் "ஈசாயின் மகன்" என்றழைக்கப்பட்டிருந்தார் (1சாமு. 22:7). அதுபோலவே இங்கே ஈசாயின் அடிமரத்திலிருந்து தோன்றின துளிராக அழைக்கப்படுகிற யெஷுஆ, மிகத் தாழ்மையான நிலையில் பிறந்தார், நற்பெயரற்ற ஓர் இடமாகிய நாசரேத்தில் வளர்ந்தார் (யோவா. 1:46). மேலும் அவர் ஒரு தச்சனாகவும் தச்சனின் மகனாகவும் இருந்தார் என்று நிந்திக்கப்பட்டார் (மத்.13:55-58; மாற்.6:3). இவ்வாறாக அடையாளமான தாவீதுக்கும் நிஜ நிறைவேறுதலான தாவீதுக்கும் சில ஒத்த அனுபவங்கள் இருந்தன.

4. ஏசா. 11:1-ம் வசனத்தில் தாவீது ஈசாயின் அடிமரம் என்று அழைக்கப்படுகிறார். ஆகையால் ஈசாய் அவருடைய வேராக இருந்தார். அதாவது ஈசாய் தாவீதை பெற்றெடுத்ததால் அவருடைய வேராக, அவருடைய ஜீவனின் ஊற்றாக இருந்தார். மேலும் இந்த வேரிலிருந்தே நிஜ நிறைவேறுதலான தாவீதின் கிளையும் எழும்பினது. அதாவது நிஜ நிறைவேறுதலான யெஷுஆ மாம்சத்தின்படி ஈசாயின் சந்ததியாராயிருந்தார். எப்போது மற்றும் எவ்வாறு யெஷுஆ தாவீதின் வேராகவும், அவருடைய தகப்பனாகவும், அவருடைய ஜீவனின் ஊற்றாகவும் ஆகிறார்?

5. நாங்கள் இவ்வாறு பதிலளிக்கிறோம்: அவர் "மாம்சமாவதற்கு" முன்பல்ல என்பதில் சந்தேகமில்லை. ஏனென்றால் அவர் மாம்சமாக்கப்பட்ட போதுதான், மனிதனாகிய யெஷுஆவாக, அவருடைய தாயாகிய மரியாளின் மூலம் ஆதாமின் சந்ததியோடு பந்தத்திற்குள் வந்தார் (எபி. 2:14-18). மனுகுலத்தோடும் தாவீதோடும் அவருக்கிருந்த இந்த பந்தத்தில் ஒரு "வேராக" இல்லாமல், ஒரு "கிளை"யாக இருந்தார். அவர் தாவீதின் ஆண்டவராக ஆன அதே செயல்முறையின் மூலமும், அதே காலத்திலும் தாவீதுக்கும் முழு மனுகுலத்திற்கும் ஜீவன், வாழ்வாதாரம் மற்றும் வளர்ச்சியின் ஊற்றாகிய "வேராக" ஆனார் (யோவா.1:4;6:48;14:6). அந்த செயல்முறையானது மீட்கும் கிரயமாக அவருடைய மரணம் என்பதாகும். அதின் புண்ணியத்தின் மூலம் அவர் ஆதாமும், தாவீது உட்பட ஆதாமின் சந்ததியார் அனைவரும் இழந்த ஜீவ உரிமையையும் ஜீவாதார உரிமைகளையும் தேவ நீதியினிடமிருந்து கிரயத்திற்குக் கொள்கிறார். மேலும் அதற்குரிய காலமானது ஆதாமின் மீட்பராகவும் மனுகுலத்தின் மீட்பராகவும் ஆகையால் தாவீதின் மீட்பராகவும் இருக்க யெஷுஆ மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்ட காலமாகும்.

6. மனுஷனாவதற்கு முன்பிருந்த நிலையிலுள்ள லோகாஸோ, மனிதனாகிய யெஷுஆவோ தாவீதின் ஆண்டவராகவும், தாவீதின் வேராகவும் இருக்கவில்லை. உயிர்த்தெழுந்த யெஷுஆதான் தாவீதின் ஆண்டவராகவும் தாவீதின் வேராகவும் இருந்தார். "நாம் நியாயமாக்கப்படுவதற்காக" அவர் எழுப்பப்பட்டார் (ரோம. 4:25). முந்தின ஆதாம் முதல் "வேராக" இருந்தார். அவரிலிருந்து முழு மனுகுலமும் உண்டாக்கப்பட்டது. அவர் "பூமியிலிருந்து உண்டான மண்ணானவராக"

இருந்தார். ஆனால் இரண்டாம் ஆதாம் ஆவி ஜீவியாக இருக்கிறார் - "உயிர்ப்பிக்கிற (ஜீவனை அளிக்கிற) ஆவி யாக" இருக்கிறார் (1கொரி. 15:45). அவர் தம்முடைய இரண்டாம் வருகையில் வந்து, இழந்ததைத் திரும்பக் கொடுத்தலின் செயல்முறைகளின் மூலம் மனுகுலத்தைத் தூக்கி நிறுத்துவார் (அப்.3:19-23) அதாவது முந்தின ஆதாமின் மூலம் மனுகுலம் இழந்த சிலாக்கியங்கள் மற்றும் ஆசீர்வாதங்களெல்லாவற்றையும் திரும்பக் கொடுப்பார். மேலும் நித்திய ஜீவனை ஆர்வமாக விரும்பி, அதற்குத் தகுதியுள்ளவர்களாகத் தங்களை நிரூபித்தவர்களுக்கு நித்திய ஜீவனை அளிப்பார் (யோவா. 3:14-17; வெளி. 20:7-9; 21:6; 22:17).

7. இவ்வாறாக முந்தின ஆதாம் பட்ட கடனை (பாவத்தின் சம்பளம் மரணம் – ஆதி. 2:17; எசே. 18:4, 20; ரோம. 6:23) தீர்ப்பதின் மூலம் யெஷுஆ மனுகுலத்திற்கு மறுபடியும் ஜீவனைக் கொடுக்கும் இரண்டாம் ஆதா மாகவும் (மத். 19:28), அவர்களுக்கு "நித்திய ஜீவனை" அளிக்கும் படிக்கு அவர்களுடைய "நித்திய பிதா வாகவும்" "தாவீதின் சிங்காசனத்தின் மேல்" வீற்றிருக்கிற நித்திய ராஜாவாகவும் ஆகிறார் (ஏசா.9:6,7).

8. தேவன் செய்த சர்வ ஞானமான, நீதியான, அன்பான, வல்லமையான ஏற்பாடாகிய யெஷுஆவுக் காகத் தேவனுக்கு நன்றி கூறுவோம். ஒரு மானிட தகப்பன் வழியாக அல்லாமல் கன்னி மரியாளின் வழியாக, மாம்சத்தில் இருந்தபோது, ஆதாம், ஆபிரகாம், ஈசாய், தாவீது முதலியவர்களின் கிளையாக இருந்தார். இப்போது ஆதாமுக்கும், ஆபிரகாமுக்கும், ஈசாயிக்கும், தாவீதுக்கும், பாவத்தினால் உலர்ந்து போன மனுகுலத்தில் நித்திய ஜீவனை ஏற்றுக் கொண்டு, புது உடன்படிக் கையின் நிபந்தனைகளின் கீழ் அதற்குப் பாத்திரராகத் தங்களை நிரூபிக்கும் ஒவ்வொரு கிளைக்கும் புது ஜீவனையும் வாழ்வாதாரத்தையும் வளர்ச்சியையும் கொடுக்க ஆயத்தமாயிருக்கிற இரண்டாம் ஆதாமாகவும், புதிய வேராகவும் இப்போது இருக்கிறார் (ரோம. 15:12). "கிளை" என்ற நாமமுடையவரும், "சிங்காசனத்தின் மேல் வீற்றிருந்து ஆளுகை செய்யும் ஆசாரியருமானவரின்" நீதி மற்றும் சமாதானத்தின் ஆளுகை (சகரி. 6:12,13) உண்மையாகவே செழிப்பாக இருக்கும். அதின் ஆசீர் வாதங்கள் மகிமையாக இருக்கும். அவருடைய நாமம் என்றென்றைக்கும் போற்றித் துதிக்கப்படுவதாக!

***********************************

## புதுச்சேரி கன்வென்ஷன்

கர்த்தருக்குச் சித்தமானால்
"மில்லினிய வேதாகம சத்திய இயக்கத்தின்"
சகோதர ஐக்கியக் கூட்டம், புதுச்சேரியில்
பிப்ரவரி மாதம் 13,14 & 15 தேதிகளில்
(வெள்ளி, சனி, ஞாயிறு) நடைபெறும்.
"தாகமாயிருக்கிறவன் வரக்கடவன்
விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை
இலவசமாய் வாங்கிக்கொள்ளக்கடவன்"

**அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.**

*சங். 91:14*



நமது
**கர்த்தராகிய யெஷுஆவின் ஞாபகார்த்தத்தை 2026 மார்ச் மாதம் 31-ம் தேதி செவ்வாய்க்கிழமை**
மாலை 6 மணிக்குப் பின்பு
ஆசரிப்போமாக

**"என்னை நினைவுகூரும்படி இதைச் செய்யுங்கள்"**

***உங்கள் கவனத்திற்கு***
சில கட்டுரை பகுதிகள்,
நமது அழைப்பிற்கும்,
இதுவரை கிடைத்த நிகழ்கால சத்தியத்திற்கும்
இணங்க, மாற்றம் செய்யப்பட்டுள்ளது


# புது உடன்படிக்கை
*Monthly newsletter published by the brethren of the Millennial Bible Truth Movement*
*Website: www.mbtm.in*